விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu

வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | மலர் : 01 | 14.03.2021 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 104 | பக்கங்கள் : 16




# அதிகாரப்பகிர்வு மூலமே ஈழத்தமிழர்களுக்கு தீர்வு!

## யாழில் இந்தியத் தூதுவர் உறுதி

யாழ்ப்பாணம், மார்ச் 14

இலங்கையில் இனப்பிரச்னை விடயத்தில் தமிழர்களுக்கு அதிகாரப்பகிர்வு மூலமாகத்தான் தீர்வு என்பதில் இந்தியா உறுதி யாக உள்ளது என இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.

02





## இனப்படுகொலை பொறுப்புக்கூறலில் இந்தியாவின் பங்கு மிகக்காத்திரமானது!

### கஜேந்திரகுமார் தூதுவரிடம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச்.14

தமிழர் மீதான இனப்படுகொலைக்கான பொறுப்புக்கூறலை வலியுறுத்துவதில் இந்தியா காத்திரமான பங்கை வகிக்க வேண்டும். அத்துடன், சர்வதேச விசாரணையை இந்தியா வலியுறுத்த வேண்டும் என யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற இந்தியத் தூதுவருடனான சந்திப்பில் தமிழ்த் தேசிய

02

## மத்தியிலே கூட்டணி மாகாணத்தில் தனிவழி!

### சுதந்திரக்கட்சி அதிரடி

கொழும்பு, மார்ச் 14

இவ்வாண்டுக்குள் நடைபெறும் என எதிர்ப்பார்க்கப்படும் மாகாணசபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தனித்து போட்டியிடக்கூடும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கடந்த வியாழக்கிழமை சுதந்திரக்கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற விசேட

02

## இந்தியப் பிரதமர் மோடியுடன் ஜனாதிபதி கோட்டாபய பேச்சு!

புதுடில்லி, மார்ச் 14

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையில் தொலைபேசியில் கலந்துரையாடலொன்று நடைபெற்றுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்

02



## மாகாண சபை முறைமையை இந்தியா பலப்படுத்தவேண்டும்!

### தூதுவரிடம் 10 தமிழ்க் கட்சிகள் கோரிக்கை



யாழ்ப்பாணம், மார்ச்.14

மாகாண சபை முறைமையை பலப்படுத்த இந்தியா நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று 10 தமிழ்க் கட்சிகளின் கூட்டு, இந்தியத் தூதரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

02

## வடக்கில் மேலும் 7 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

யாழ்ப்பாணம், மார்ச் 14

வடக்கு மாகாணத்தில் மேலும் ஏழு பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது என வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்

02



காணி அலுவலகம் அ’புரத்துக்கு மாற்றம்:

## வடக்கு அதிகாரங்கள் பறிக்கப்படவில்லை!

### சுரேன் ராகவன் எம்.பி. சுட்டிக்காட்டு

வவுனியா, மார்ச்.14

வடக்கு மாகாண காணி ஆவண அலுவலகம் அநுராதபுரத்துக்கு மாற்றப்பட்டுள்ளதால் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த எந்தவொரு அதிகாரங்களும் பறிக்கப்படவில்லை எனவும் அத

02



04

தமிழகத்தில் மீண்டும் அ.தி.மு.கவின் ஆட்சி



09

ஜெனிவா அரசியலில் ஈழத்தமிழர் ‘அற’வியல்



11

அபாய கட்டத்தில் யாழ்ப்பாணம் இதுவரை 400 பேருக்கு தொற்று



13

தீவிரவாத குற்றச்சாட்டில் கைதாவோருக்கு புனர்வாழ்வு

நிலாவெளிக் கடலில் குளிக்க சென்ற

## மற்றைய யாழ்.இளைஞனின் சடலமும் கரை ஒதுங்கியது!

திருமலை, மார்ச் 14

திருகோணமலை-நிலாவெளி கடலில் குளிக்கச் சென்றபோது காணாமற்போன மற்றைய இளைஞனின் சடலமும் நேற்று சனிக்கிழமை மாலை கரை ஒதுங்கியது.

யாழ்ப்பாணம்-குப்பிளான் மற்றும் வேறு இடங்களைச் சேர்ந்த ஏழு இளைஞர்கள் இணைந்து நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மகா சிவராத்திரி வழிபாட்டுக்காகத் திருக்கோணேஸ்வரர் ஆலயத்துக்கு மோட்

02

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## அதிகாரப்பகிர்வு....

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஈழத்தமிழர்களுக்கும், தமிழ் நாட்டுக்கும் இடையில் தொடர்புகளை ஏற்படுத்தும் போக்குவரத்துச் சேவைகளை விரைவில் ஆரம்பிக்கவுள்ளதாகவும் இந்தியத் தூதுவர் குறிப்பிட்டார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, நேற்று பல்வேறு தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பு குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவிக்கையில்-

இந்தியத் தூதுவரின் வடக்கு, கிழக்கு விஜயம் முக்கியமான ஒரு சந்தர்ப்பத்தில் நடைபெறுகிறது.

இந்நிலையில், இளம் தலைவர்களைச் சந்திக்க வேண்டும் என்ற ஆவலை வெளிப்படுத்திய காரணத்தால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இளம் தலைவர்களுக்கு இந்த (இன்றைய) சந்திப்பில் நாம் முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றோம்.

பேச்சுவார்த்தையிலும் அவர்களுடைய கருத்துக்கள்தான் கூடுதலாகப் பகிரப்பட்டன. இந்தச் சந்திப்புக் குறித்து நிறைவான மகிழ்ச்சியை தூதுவர் வெளிப்படுத்தினார்.

இந்தச் சந்திப்பில், அரசியல் தீர்வு குறித்தும் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்படுகின்ற ஆக்கிரமிப்புத் தொடர்பாகவும், அபிவிருத்தி விடயங்களில் இந்தியாவின் பங்களிப்புத் தொடர்பாகவும் பேசப்பட்டன.

இனப்பிரச்னைக்கான தீர்வு விடயத்தில், இந்தியா தொடர்ந்தும் முன்னர் உள்ள நிலைப்பாட்டிலேயே இருப்பதாகவும், அது முழுமையான அதிகாரப்பகிர்வு உள்ள ஒரு விடயமாகத் தான் இருக்கவேண்டும் என்பதில் எப்பொழுதும் மாறாத தீர்மானத்துடன் இருப்பதாகவும் தூதுவர் குறிப்பிட்டார். அது, கொழும்பாக இருக்கட்டும் ஜெனிவாவாக இருக்கட்டும். ஒரே நிலைப்பாடுதான் இருக்கும் என்று அவர் உறுதியளித்துள்ளார்.

அத்தடன், அபிவிருத்தி விடயங்களில் பல்வேறு வாக்குறுதிகளை அவர் கொடுத்துள்ளார். நேரம் குறைவாக இருந்த காரணத்தால் பல விடயங்களை விவரமாகப் பேசமுடியவில்லை.

இந்நிலையில், இந்திய மக்களோடு அதாவது, தமிழ்நாட்டில் உள்ள மக்களோடு இருக்கின்ற தொடர்பாடல் சம்பந்தமாக பலாலிக்கும் சென்னைக்குமான விமானப் போக்குவரத்து வெகுவிரைவில் ஆரம்பமாகும் என்பதை தூதுவர் உறுதிப்படுத்தினார்.

காங்கேசன்துறைக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையிலான கப்பல் போக்குவரத்து ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையிலான படகுப் போக்குவரத்து தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் கேட்ட கேள்விக்கு, குறித்த சேவையைத் தொடங்குவதற்கான வேலையில் தற்போது ஆட்களைத் தெரிவு செய்யும் அளவுக்கு முன்னேற்றம் அடைந்திருப்பதாகவும் விரைவில் அது ஆரம்பமாகும் என்ற பதிலையும் சொல்லியிருக்கிறார்.

இதன்மூலமாக, தமிழ் மக்களுக்கு இடையிலே உறுதியான ஒரு தொடர்பாடலை ஏற்படுத்தி, பொருளாதார ரீதியாக மட்டுமல்லாமல் அரசியல் ரீதியாகவும் ஒரு உறுதியான நிலைப்பாட்டை நாம் அடையமுடியும் என்ற கருத்தை இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே வெளிப்படுத்தியுள்ளார் -என்றார் சுமந்திரன். (அ-எ)

## மத்தியிலே....

கூட்டமொன்றிலும் இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், சுதந்திரக்கட்சியின் சார்பில் போட்டியிட விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோருவதற்கும் இந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியில் சுதந்திரக்கட்சி பங்காளியாக இருப்பதால், கூட்டணியாக தேர்தலை எதிர்கொள்வதற்கு அழைப்பு விடுக்கப்படும் பட்சத்தில் அது குறித்து பரிசீலிக்கவேண்டும் எனவும், தேவையான இட ஒதுக்கீடுகள் கிடைக்காத பட்சத்தில் தனி வழி செல்வதே சிறந்தது எனவும் கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, மாகாணசபைத் தேர்தலில் தனி வழி சென்றால்கூட அரசியிலிருந்து சுதந்திரக்கட்சி வெளியேறாது எனவும், மத்தியில் கூட்டணி பயணம் தொடரும் எனவும் சுதந்திரக்கட்சியின் முக்கிய உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஜெனிவா....

வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை ஆய்வுகூடத்தில் 485 பேரின் மாதிரிகள் நேற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதில் யாழ். மாவட்டத்தில் நான்கு பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் இருவரும், மன்னார் மாவட்டத்தில் ஒருவரும் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில், உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவரும் சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவரும் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர். இவர்கள் இருவரும் ஏற்கனவே தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்கள் எனவும், சுயதனிமைக்குட்படுத்தப்பட்டவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், யாழ்.போதனா வைத்திய சாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட இருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டது. இவர்களில் ஒருவர் தனிமைப்படுத்தல் நிலையத்தைச் சேர்ந்தவர் என்பதுடன் மற்றையவர் கொரோனா தொற்று அறிகுறிகளுடன் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இதேவேளை, புதுக்குடியிருப்பு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இருவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் கிளிநொச்சி ஆடைத்தொழிற்சாலையில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்ட பணியாளருடன் தொடர்புடைய, தனிமைப்படுத்தலில் இருந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

மேலும், மன்னார் பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது-என்றார். (அ-எ)

## மாகாண சபை....

10 தமிழ்க் கட்சிகள் கூட்டின் தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் சி.வி.விக்னேஸ்வரன், பேராசிரியர் வி.பி.சிவநாதன், ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சி சார்பில் என்.சிறிகாந்தா, எம்.கே.சிவாஜிலிங்கம், தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் சார்பில் பொ.ஐங்கரநேசன், ஜனநாயகப் போராளிகள் கட்சி சார்பில் வேந்தன், கதிர், ஈழத்தமிழர் சுயாட்சிக்கழகம் சார்பில் திருமதி அனந்தி சசிதரன் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பின்போது மாகாண சபை முறைமையை வலுப்படுத்துவது பற்றி பிரதானமாகக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

காணி அபகரிப்பு பற்றியும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது. அதே வேளை, வேலைவாய்ப்புடன் கூடிய அபிவிருத்தித் திட்டம் பற்றியும், இந்திய உயர்கல்வி நிறுவனங்களை வடக்கில் திறப்பது பற்றியும் சுட்டிக்காட்டப்பட்டது. (அ-எ)



# செல்வச்சந்திரனின் பஞ்ச ஈச்சரங்கள் மீது பாடப்பட்ட பாடல் இறுவட்டு வெளியீடு

மன்னார், மார்ச் 14

ஏழாலையூர் இளையதம்பி செல்வச்சந்திரன் எழுதிய பாடல்கள் இசைக்கோன் பகவதி கருணாகரனின் இசையமைப்பில் ஈழத்து பாடகர்களால் பாடப்பட்ட இறுவெட்டை திருக்கேதீஸ்வர ஆலய பிரதமகுரு வெளியிட்டு வைக்க மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். குணபாலன் பெற்றுக் கொண்டார்

தொடர்ந்து சிறப்பு பிரதிகளை மாந்தை பிரதேச செயலாளர் பிரதீப் மற்றும் ஆலய நிர்வாகத்தினர் பெற்றுக் கொண்டனர்.

இலங்கையில் பாடல் பெற்ற தலங்களான திருக்கோணேச்சரம், திருக்கேதீச்சரம், முன்னேச்சரம்,நகுலேச்சரம், ஒட்டுசுட்டான் தான்தோன்றிஈச்சரம் ஆகிய பஞ்ச ஈச்சரங்களின் தொன்மை வரலாறுகளை கூறும் வகையில் பாடப்பட்ட முதலாவது வெளியீடு இதுவாகும்.

## வடக்கு அதி....

னைப் பறிக்க முடியாது என்றும் பாராளுமன்ற உறுப்பினரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வன்னி மாவட்டத் தலைவருமான சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தமிழர் தேசம் இழந்த ஜனநாயகத்தையும், இறந்துபோன சம உரிமைகளையும் பெறுவதற்கான முயற்சிகளை நாம் எடுக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வவுனியா கந்தசுவாமி கோவிலில் நேற்றுச் சனிக்கிழமை விசேட பூசை வழிபாடுகளில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

நான் வடக்கு மாகாண ஆளுநராகப் பதவி வகித்த 10 மாதங்களில் பத்தாயிரம் குடும்பங்களுக்கு அரச காணிகளை வழங்கியிருந்தேன். இராணுவத்திடம் இருந்த ஆயிரம் ஏக்கர் காணிகளை பொதுமக்களிடம் கையளித்திருந்தேன்.

கொழும்பில் இருக்கும் காணி ஆணையாளரிடமிருந்து கிடைக்கவேண்டிய ஒழுங்கான ஒத்துழைப்புக்கள் வலுவாகக் கிடைக்கவேண்டும் என்பதற்காகவே வட மாகாண காணி ஆவண அலுவலகம் அனுராதபுரத்திற்கு மாற்றப்பட்டுள்ளதே தவிர வட மாகாணத்தைச் சேர்ந்த எந்த அதிகாரங்களும் பறிக்கப்படவில்லை. பறிக்கப்படக்கூடாது-பறிக்கப்பட முடியாது.

சுதந்திரக் கட்சியின் வன்னி மாவட்டத் தலைவராக நியமிக்கப்பட்டதன் மூலம் தமிழ் தேசத்திற்காக நான் செய்ய வேண்டிய பணியை திரும்பவும் எண்ணிடம் இறைவன் வழங்கியதாகவே நினைக்கிறேன்.

வடக்கு மாகாணத்திலேயே வீழ்த்தப்பட்ட சமூகங்கள் வாழ்கின்ற வன்னியை முழுமையாக மாற்றியமைக்க என்னுடைய முயற்சிகளை எடுக்க வேண்டியுள்ளது. குறிப்பாக, மன்னார் மாவட்டம் காலங்காலமாக பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. அந்த நிலை மாறவேண்டும்.

நாட்டில் ஆழமான ஒரு ஜனநாயகத்தை உருவாக்குவதற்கான அடித்தளத்தை உருவாக்க வேண்டும். விசேடமாக தமிழ் தேசத்தில் இழந்துபோன ஜனநாயகத்தையும், இறந்துபோன சம உரிமைகளையும் பெறுவதற்கான முயற்சிகளை நாம் எடுக்க வேண்டும்-என்றார். (அ-எ)

## இந்தியப் பிரதமர்....

என. இதன்போது அபிவிருத்தித் திட்டங்கள் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன.

இந்த உரையாடலில் முக்கியமாக என்ன விடயங்கள் பேசப்பட்டன என்பது தொடர்பில் செய்திகள் எதுவும் வெளியாகவில்லை.

## இனப்படுகொலை....

மக்கள் முன்னணியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை மதிக்கின்றோம். ஆனால், அதன் வழியான 13 ஆவது திருத்தச்சட்ட மூலத்தை தீர்வாக ஏற்க முடியாது. தமிழர் தேசத்தை அங்கீகரிக்கும் தீர்வை தொடர்ந்தும் வலியுறுத்துவோம் எனவும் இந்தியத் தூதுவரிடம் தெரிவித்தார் என்று கஜேந்திரகுமார் குறிப்பிட்டார்.

இந்திய பாதுகாப்பு நலன்களுக்கு தமிழர் தேசம் ஒரு கவசமாகவே இருக்கும். நாம் இந்திய நலன்களுக்கு எதிரானவர்கள் அல்லர். பூகோள அரசியல் போட்டியின் பகடைகளாக இலங்கையின் வடக்கு - கிழக்கு பகுதியை இந்தியாவுக்கு எதிரான சக்திகளுக்கு வழங்குவதை நாம் எதிர்க்கின்றோம் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ-எ)

## மற்றைய....

டார்ச் சைக்கிள்களில் சென்றனர். வழிபாட்டின் பின்னர் நேற்று மாலை நிலாவெளிக் கடலில் குளிக்கச் சென்றனர்.

இளைஞர்களில் இருவர் காணாமற் போயிருந்த நிலையில் குப்பிளான் தெற்கைப் பிறப்பிடமாகவும், புன்னாலைக் கட்டுவன் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த கௌதமன் (வயது-21) நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டார்.

அவரது சடலம் திருகோணமலைப் பொதுவைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் சட்ட வைத்திய பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளின் பின்னர் நேற்று மதியம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்நிலையில் குப்பிளான் வடக்கைச் சேர்ந்த சிவச்சந்திரன் சிந்துஜன் (வயது-21) என்ற இளைஞனும் காணாமற்போயிருந்த நிலையில் நேற்று மாலை அவரது சடலம் கரை ஒதுங்கியுள்ளது.

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
14.03.2021 ஞாயிற்றுக்கிழமை
சார்வரி, பங்குனி 01

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# இந்தியாவின் தேசிய பாதுகாப்பில் முன்னணியினர்

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருக்கும் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பால்கே, பல்வேறு அரசியல் தரப்பினரையும் சந்தித்திருக்கின்றார். இதன்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரையும் சந்தித்திருக்கின்றார். இந்த சந்திப்பு தொடர்பில் ஊடகங்களிற்கு தெரிவித்திருக்கும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழர் தேசம், இந்தியாவின் தேசிய பாதுகாப்பிற்கான கவசமாக இருக்குமென்று தாம் தூதுவரிடம் கூறியதாக தெரிவித்திருக்கின்றார். அதேவேளை, இந்தியாவின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் விடுக்கும் சக்திகள் வடக்கு, கிழக்கை பயன்படுத்துவதை தாம் எதிர்ப்பதாகவும் தெரிவித்திருக்கின்றார்.

இந்தியாவின் தேசிய பாதுகாப்பில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் உண்மையான கரிசனையை காண்பித்திருப்பின் அது வரவேற்கப்படவேண்டிய விடயம்தான். ஆனால், இவ்வாறான விடயங்கள் வெறும் பேச்சோடு நின்றுவிடாது, செயற்பாட்டிலும் நிரூபிக்கப்படவேண்டும். ஆனால், தமிழ்த் தேசியவாத அரசியல் கட்சிகளின் தலைமைகள், உண்மையிலேயே இந்தியாவின் தேசிய பாதுகாப்பில் கரிசனை கொண்டிருக்கின்றனவா என்பது சந்தேகத்துக்குரிய ஒன்றுதான். ஏனெனில், இந்தியாவின் தேசிய பாதுகாப்புடன் நேரடியாக மோதுகின்ற விடயங்கள் இலங்கையில் இடம்பெறுகின்றபோது, தமிழ் தலைமைகள் வாய்திறப்பதில்லை. உதாரணமாக, கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்றபோதுதான், ரணில் விக்கிரமசிங்க மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த அம்பாந்தோட்டை துறைமுகத்தை, சீனாவிற்கு 99 வருட குத்தகைக்கு வழங்கியிருந்தார். ஆனால் சம்பந்தன் இது தொடர்பில் வாய்திறக்கவில்லை. அதன் பின்னரும் ரணில் விக்கிரமசிங்கவை பாதுகாப்பதிலேயே கூட்டமைப்பு கண்ணும் கருத்துமாக செயற்பட்டது. அதேவேளை, கூட்டமைப்பு தவறான பாதையில் செல்கின்றது என்று கூறி, அரசியல் செய்துவரும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அணியினரும் அது தொடர்பில் வாய்திறந்ததில்லை. அண்மையில் யாழ்ப்பாணத்தின் மூன்று தீவுகளில் மின்சார உற்பத்திக்கான திட்டமொன்றில் ஈடுபடுவதற்கு சீன நிறுவனமொன்றிற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. ஆனால், இது தொடர்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வாய்திறக்கவில்லை. இந்தியாவின் தேசிய பாதுகாப்பில் கரிசனையிருந்திருந்தால், அதனை கண்டித்தல்லவா இருந்திருக்க வேண்டும். ஏன் கண்டிக்கவில்லை?

இந்தியாவின் தேசிய பாதுகாப்பை எவ்வாறு உறுதிப்படுத்திக் கொள்வதென்பது இந்தியாவிற்கு தெரியும். ஆனால் இந்தியாவிடம் உதவிகளை கோரும் தமிழர்கள், இந்தியாவின் நலன்களில் கரிசனையுடன் இருக்கின்றனரா என்பதையும் இந்தியா அவதானிக்கும். அப்போதுதான் தமிழர்கள்மீது இந்திய அதிகாரத்தரப்பினருக்கு நம்பிக்கை ஏற்படும். சில கடந்தகால நிகழ்வுகள், தமிழர்கள் மீதான நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு இப்போதும் தடையாகவே இருக்கின்றன. இதனை விளங்கிக் கொண்டு தமிழர்களின் செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும். வடக்கு தமிழ் அரசியலில் அதிகம் றோவின் பெயரை இழுத்து அரசியல் செய்யும் ஒரு பக்கமும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அணியினருக்குண்டு. 2018, உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது, தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிடுமாறு, இந்திய உளவுத்துறை, சுரேஸ் பிரேமச்சந்திரனை தூண்டியதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஆதரவாளர்கள் சமூக ஊடகங்களில் பிரச்சாரங்களை மேற்கொண்டிருந்தனர். இது அனைவரும் அறிந்த சங்கதி. இவ்வாறான வரலாற்றை கொண்டிருக்கும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் (காங்கிரஸ்) தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் இந்தியாவின் தேசிய பாதுகாப்பில் கரிசனை கொண்டிருப்பதாக கூறுவதை இலகுவில் எவருமே நம்பிவிடப் போவதில்லை. ஆனாலும், உண்மையிலேயே பிராந்திய அரசியலை விளங்கிக்கொண்டு, இவ்வாறான விடயங்கள் கூறப்பட்டிருக்குமாக இருந்தால், அது வரவேற்கப்பட வேண்டியதே!

# நூலகங்களாக மாறிய பழைய பேருந்துகள்



*போக்குவரத்து பாவனையிலிருந்து நீக்கப்பட்ட இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துகள் நூலகங்களாக மீள புதுப்பிக்கப்பட்டு நூலகங்கள் அற்ற பாடசாலைகளுக்கு வழங்கும் 'பேருந்தில் எதிர்காலத்திற்கு' திட்டத்தின் இரண்டாம் கட்டம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் அலரி மாளிகையில் இடம்பெற்றது.*

*அதற்கமைய 20 மாவட்டங்களில் நூலக வசதியற்ற 20 பாடசாலைகளுக்கு இவ்வாறு பேருந்து நூலகங்கள் வழங்கப்பட்டன.*

*'பேருந்தில் எதிர்காலத்திற்கு' திட்டத்தின் முதலாவது கட்டம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் கடந்த ஒக்ரோபர் 01 சிறுவர் தினத்தன்று செயற்படுத்தப் பட்டது. அன்றைய தினம் 5 மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட 5 பாடசாலைகளுக்கு பேருந்து நூலகங்கள் வழங்கப்பட்டன.*

*இரண்டாம் கட்டமாக பிரதமரின் தலைமையில் 20 மாவட்டங்களில் தெரிவுசெய்யப்பட்ட 20 பாடசாலைகளுக்கு நேற்று முன்தினம் பேருந்து நூலகங்கள் வழங்கப்பட்டன.*

*வாசிப்பு என்பது மிக முக்கியமானதொரு விடயமாகும். அதன் மூலம் பிள்ளைகளுக்கு சமூக, பொருளாதார, அரசியல் அறிவை பெற்றுக்கொள்ள முடியும். இது பிள்ளைகளை வாசிப்பிற்கு பழக்குவதற்கு உந்துததலாக அமையும். நாம் இன்றைய சூழலுக்கு பொருத்தமான புத்தகங்கள் மற்றும் இணைய வசதிகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்வோம் என போக்குவரத்து அமைச்சர் காமினி லொகுகே தெரிவித்தார்.*


*நாம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் பாவனைக்கு உட்படுத்த முடியாத பேருந்துகளை இரும்பிற்காக விற்பனை செய்த நிலையே காணப்பட்டது. கடந்த அரசாங்கத்தில் அவ்வாறான பேருந்துகள் கடலில் போடப்பட்டன. இ.போ.ச. ஊழியர்கள் அதற்கு விருப்பம் தெரிவிக்கவில்லை. இந்த திட்டத்தின் மூலம் போக்குவரத்து பாவனையில் இருந்து நீக்கப்படும் பேருந்துகள் முழுமையான நூலகங்களாக மாற்றப்படுகின்றன. நூலக வசதியற்ற பாடசாலைகளுக்கு நாம் இப்பேருந்துகளை பெற்றுக் கொடுக்கிறோம். அதில் இலவச இணைய வசதியும் உள்ளடங்குகிறது. மேலும் 34 பேருந்துகள் இதேபோன்று புதுப்பிக்கப்பட்டு வருவதாக இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.*

*இப்பேருந்து நூலகங்களை குறியீட்டு ரீதியாக வழங்கி வைத்த பிரதமர், இவ்வாறு புதுப்பிக்கப்பட்ட பாடசாலை நூலக பேருந்தொன்றின் நாடாவை வெட்டி திறந்து வைத்து, நூலக வடிவமைப்பு மற்றும் புத்தகங்களை ஆய்வு செய்தார்.*

*போக்குவரத்து அமைச்சின் அனுசரணையில், இலங்கை போக்குவரத்து சபை, எஸ்.எல்.டி மொபிரெல் மற்றும் இலங்கை தேசிய நூலகம் மனுசத் தெரனவுடன் இணைந்து 'பேருந்தில் எதிர்காலத்திற்கு' திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.*

*குறித்த நிகழ்வில் அமைச்சர் பந்துல குணவர்தன, மாகாண ஆளுநர்களான டிகிரி கொப்பேகடுவ, அனுராதா யஹம்பத், ராஜா கொளுரே, ரொஷான் குணதிலக, இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க, தேசிய நூலக சபையின் தலைவர் சொனால குணவர்தன உள்ளிட்ட நூலக பேருந்து வழங்கப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



மார்ச் - 14 ஞாயிற்றுக்கிழமை
சார்வரி வருடம் - பங்குனி - 01
நல்ல நேரம் : 7.30 - 9.00
ராகு காலம் : 4.30 - 6.00
திதி : சூன்ய




14.03.2021

**மேடம்**
செல்வநிலை உயரும் நாள். திடீர் முன்னேற்றம் உண்டு. பாசத்தோடு பழகியவர்கள் பக்கபலமாக இருப்பர். இடமாற்றச் சிந்தனைகள் உருவாகும். விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேர்வர்.

**இடபம்**
பிள்ளைகளால் பெருமை சேரும் நாள். முன்னோர் வழிச்சொத்துகள் கிடைப்பதில் இருந்த தடைகள் அகலும். நட்பால் நல்லகாரியம் நடைபெறும். தொழிலில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

**மிதுனம்**
நினைத்தது நிறைவேறும் நாள். எதையும் ஒளிவு மறைவின்றி சொல்வீர்கள். நண்பர்கள் நல்ல தகவலை கொண்டு வந்து சேர்ப்பர். உடன்பிறப்புகள் உங்கள் பணிக்கு உறுதுணையாக விளங்குவர்.

**கடகம்**
கவனமுடன் செயல்பட வேண்டிய நாள். நண்பர்களுடன் ஏற்படும் வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. சுதந்திரமாக எதையும் செய்ய இயலாது. அலுவலகத்தில் மேலதிகாரிகளின் வெறுப்புக்கு ஆளாக நேரிடும்.

**சிம்மம்**
நீண்ட நாளைய எண்ணம் நிறைவேறும் நாள். நண்பர்களின் நல்லாதரவு உண்டு. குடும்ப உறுப்பினர்களால் உதிரி வருமானங்கள் வந்து சேரும். ஆரோக்கியம் சீராக மாற்று மருத்துவம் கைகொடுக்கும்.

**கன்னி**
விரயங்கள் அதிகரிக்கும் நாள். வீடு மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு. கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**துலாம்**
முயற்சியில் அனுகூலம் ஏற்படும் நாள். அருகில் உள்ளவர்களின் ஆதரவு கூடும். குடும்பத்தில் பெரியவர்களோடு ஏற்பட்ட கருத்து வேறுபாடு மறையும். குழந்தைகள் பற்றி முக்கிய முடிவெடுப்பீர்கள்.

**விருட்சிகம்**
முன்னேற்றம் கூட முன்னோர்களை வழிபட வேண்டிய நாள். அரசியல்வாதிகளால் அனுகூலம் உண்டு. பக்கத்து வீட்டாருடன் இருந்த பகை மாறும். துணிந்து சில காரியங்களைச் செய்வீர்கள்.

**தனுசு**
பஞ்சாயத்துகள் சாதகமாக முடியும் நாள். பணத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். குடும்பத்தில் அமைதி கூடும். அரசியல்வாதிகளால் ஆதாயம் உண்டு. வாகன மாற்றச் சிந்தனை மேலோங்கும்.

**மகரம்**
அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள். தாமதப்பட்ட காரியங்கள் இன்று துரிதமாக நடைபெறும். தொழில் முன்னேற்றம் உண்டு. வாகனங்களில் செல்லும் பொழுது கவனம் தேவை.

**கும்பம்**
பிரச்னைகள் தீரும் நாள். பிடிவாத குணத்தை மாற்றியமைத்துக்கொள்வது நல்லது. பிள்ளைகளின் திருமண காரியங்கள் கைகூடும். உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு திருப்தி தரும்.

**மீனம்**
தடைகள் அகலும் நாள். தனவரவு திருப்தி தரும். தக்கசமயத்தில் நண்பர்கள் கைகொடுத்து உதவுவர். இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும்.

# தமிழகத்தில் மீண்டும் அ.தி.மு.கவின் ஆட்சி!

## மனுத்தாக்கல் செய்த பிறகு ஓ.பன்னீர்செல்வம் நம்பிக்கை



சென்னை, மார்ச் 14

**234தொகுதிகளிலும் அதிமுக வெற்றி பெற்று தமிழகத்தில் மீண்டும் ஆட்சிஅமைக்கும் என்று துணை முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் தெரிவித்தார்.**

போடியில் துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் நேற்று முன் தினம் வேட்பு மனுத் தாக்கல் செய்தார்.

ஓ.பன்னீர்செல்வம் தேனி மாவட்டம் போடி தொகுதியில் ஏற்கெனவே இரு முறை போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார். தற்போது 3ஆவது முறையாக இத்தொகுதியில் போட்டியிடுகிறார்.

போடி வட்டாட்சியர் அலுவலகத்தில் வேட்பு மனுவை அவர் தாக்கல் செய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் ஓ.பன்னீர்செல்வம் கூறியதாவது:-

போடி தொகுதி மக்களுக்கு 10 ஆண்டுகளில் அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து கொடுத்துள்ளேன். கொரோனா உட்பட பல்வேறு பேரிடர் காலங்களிலும் தமிழக அரசு சிறப்பாக செயல்பட்டுள்ளது. நீண்ட நாள் கோரிக்கையான மாம்பழக் கூழ் தொழிற்சாலை இத்தொகுதியில் அமைக்கப்படும்.

கடந்த இருமுறை இத்தொகுதியில் போட்டியிட்டபோது பொதுமக்கள் அமோகமான வெற்றியை அளித்தனர். அனைத்துவாக்குறுதிகளையும் அரசாணை மூலம் நிறைவேற்றி இருக்கிறேன். நான் ஏற்றுக் கொண்ட பொறுப்புக்கு முழு கடமையாற்றி உள்ளேன். அந்த நம்பிக்கையின் அடிப்படையில் தற்போது போட்டியிடுகிறேன்.

மக்களுக்கு சேவை செய்வதே எனது ஒரே குறிக்கோள். மக்கள் ஆதரவு தருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. 234தொகுதிகளிலும் அதிமுக வெற்றி பெற்று மீண்டும் ஆட்சி அமைக்கும்-என்றார்.

# 15ஆம் திகதி ஸ்டாலின் வேட்புமனு தாக்கல்

சென்னை, மார்ச் 14

எதிர்வரும் மார்ச் 15ஆம் திகதி வேட்புமனு தாக்கல் செய்துவிட்டு அன்று மாலையே பிரசாரத்தை தொடங்க இருப்பதாக தி.மு.க தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திமுக தலைமை அலுவலகமான சென்னை அண்ணா அறிவாலயத்தில் திமுக வேட்பாளர் பட்டியலை வெளியிட்ட அவர், செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

கூட்டணி கட்சிகளுக்கு ஒதுக்கிய 61 தொகுதிகள் தவிர, தி.மு.க. போட்டியிடும் 173 தொகுதிகளுக்கான வேட்பாளர்களை அறிவித்துள்ளேன். இது வேட்பாளர் பட்டியல் மட்டுமல்ல, வெற்றி பெறுபவர்களின் பட்டியல். தி.மு.க. போட்டியிடும் தொகுதிகள் மட்டுமல்லாது 234 தொகுதிகளிலும் தி.மு.க. போட்டியிடுகிறது, கருணாநிதி தான் வேட்பாளர் என்று நினைத்து திமுகவினர் களப்பணியாற்ற வேண்டும்.

173 தொகுதிகளில் தி.மு.க. போட்டியிட்டாலும் ம.தி.மு.க. உள்ளிட்ட கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த 14 பேர் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுகின்றனர். 187 தொகுதிகளில் உதயசூரியன் சின்னத்தில் வேட்பாளர்கள் களம் காண்கின்றனர். 1971 தேர்தலில் தி.மு.க. 184 தொகுதிகளில் வென்றதுதான் ஒரு கட்சி வென்ற அதிக இடங்கள். அந்த சாதனையை இந்த முறை திமுகவே முறியடிக்கும்.

தி.மு.க. வேட்பாளர்கள் அவரவர் வசதிக்கேற்ற நாளில் வேட்பு மனு தாக்கல் செய்வார்கள். வரும் 15ஆம் திகதி கொளத்தூர் தொகுதியில் நான் வேட்புமனு தாக்கல் செய்கிறேன். அன்றைய தினம் மாலையே பிரசாரத்தை தொடங்குகிறேன்-என்றார்.

# வாக்குறுதிகளை தி.மு.க. நிறைவேற்றவேயில்லை

## முதலமைச்சர் எடப்பாடி குற்றச்சாட்டு

சென்னை, மார்ச் 14

அ.தி.மு.க. அரசு தொலைநோக்குப் பார்வையுடன் திட்டங்களை நிறைவேற்றி வருவதாக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

சேலம் மாவட்டத்தில் வேட்பாளர்கள் அறிமுக கூட்டத்தில் பேசிய அவர், தி.மு.க. ஆட்சியில் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை எனவும் குற்றம் சாட்டினார்.

ஏழை மாணவர்கள் மருத்துவக் கல்லூரியில் சேர 7.5 சதவீத உள் இட ஒதுக்கீடு செய்யப்பட்டதன் மூலம் 435 அரசு பாடசாலையில் மாணவ மாணவிகள் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்ததாகவும் அடுத்த ஆண்டு மேலும் 1650 மாணவர்கள் சேர்க்கப்பட உள்ளதாகவும் அவர் கூறினார்.

ஏழை எளிய மக்களின் கனவை தமது அரசு நனவாக்கி வருவதாகக் கூறிய முதலமைச்சர், புதிய திட்டங்களால் உயர்கல்வியில் மாணவர்கள் அதிகம் படிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மக்களிடையே தவறான தகவல்கள் பரப்பி வெற்றி பெறும் முயற்சி நடக்காது என கூறிய முதலமைச்சர், தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் சட்டம் ஒழுங்கு நிலை மோசமாகும் என குற்றம் சாட்டினார். தமிழகம் வளர்ச்சிப் பாதையில் வீறுநடை போடுவதாகக் கூறிய அவர், பொது மக்களின் ஆதரவோடு அ.தி.மு.க. மீண்டும் ஆட்சியைப் பிடிக்கும் எனவும் கூறினார்.



# அண்ணன் தி.மு.க தம்பி அ.தி.மு.க!

## ஆண்டிபட்டியில் மறுபடியும் மோதும் சகோதரர்கள்

சென்னை, மார்ச் 14

தேனி மாவட்டம், ஆண்டிபட்டியில் திமுக, அ.தி.மு.க. சார்பில் உடன்பிறந்தசகோதரர்கள் எதிரெதிர் அணியில் களமிறங்குவதால் அத்தொகுதியில் தேர்தல் களம் சூடு பிடித்துள்ளது.

ஆண்டிபட்டி முன்னாள் முதல்வர்கள் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா போன்றோர் வெற்றி பெற்ற தொகுதி ஆகும்.

1977 முதல் 2019 வரை நடந்த 12 தேர்தல்களில் 9 முறை அ.தி.மு.க. வென்றுள்ளது. இதனால் அதிமுகவின் நம்பிக்கைக்கு உரிய தொகுதியாக மாறியது. இந்நிலையில், கடந்த தேர்தலில் அதிமுக சார்பில் வெற்றி பெற்ற தங்கதமிழ்ச்செல்வன் அமமுகவில் இணைந்தார். இதனால் 2019ஆம் ஆண்டு இங்கு இடைத் தேர்தல் நடந்தது. இதில் தி.மு.க. சார்பில் மகாராஜனும், அ.தி.மு.க. சார்பில் லோகிராஜனும் போட்டியிட்டனர். இருவரும் உடன் பிறந்த சகோதாரர்கள். இதனால் இத்தொகுதி மாநில அளவில் கவனம் பெற்றது. இந்த தேர்தலில் தி.மு.க. வேட்பாளர் மகாராஜன், தனது தம்பி லோகிராஜனை விட 12 ஆயிரத்து 323 வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இந்நிலையில் இந்த தேர்தலிலும் இருவரும் தொகுதியில் எதிரெதிர் வேட்பாளர்களாக களமிறங்குகின்றனர். இதனால் தொகுதியில் தற்போதே தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது.

## செய்தியின் பின்னணியில்...
# காந்தியத்தின் இரு நினைவுகள்



**மாலி**

இந்திய சுதந்திர போராட்டத்தின்போது தோற்றிய மகாத்மா காந்தியின் காந்திய தத்துவம், உலக அரசியலில் நித்தியமானதொன்றாகிறது. சத்தியம், சாத்வீகம், சர்வோத யம், சுவராஜ்யம், சுதேசியம் என்ற அடிப்படையில் சத்தி யாக்கிரகம், சட்ட மறுப்பு, ஒத்துழையாமை, உண்ணாவிரதம், ஊர்வலம் என்று அமைகின்ற வெளிப்பாடுகள் அவை.

காந்தி வாழ்ந்த காலத்தில் அவரின் இக் கோட்பாடுகள் உலகத்தவர்கள் பலரை ஈர்த்த போது, இப்போதும் உலக அரசியல் தலைவர்கள் சிலர் காந்திய கொள்கைகளில் தாம் கொண்டுள்ள ஆகர்சத்தை வெளிப்படுத்துகிறார்கள். மாட்டின் லூதர் கிங், நெல்சன் மண்டேலா, தலாய் லாமா போன்றவர்கள் காந்தியுடன் பெரிதும் அடையாளப்படுத் தப்படுகையில் பராக் ஒபாமா, ஆங் சாங் சூகி போன்றவர்கள் தம்மை அப்படி காண்பிக்கிறார் கள்.

அயல் நாடு இலங்கையில், இதன் ஈர்ப்பும் தாக்கமும் அபரிமிதமாயிருந்தது.1927இல் மகாத்மா காந்தி இலங்கைக்கு விஜயமொன்றையும் மேற்கொண்டிருந்தார். சிலாபம், கொழும்பு, காலி, கண்டி, நுவரெலியா, மாத்தளை, ஹற்றன், பதுளை, பண்டாரவளை ஆகியவற்றுடன் யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஆகிய இடங்களுக்கு அவர் அப்போது அழைக்கப்பட்டிருந்தார். காந்தியின் இந்திய விடுதலைப் போராட்டத்துக்கு இலங்கையில் பெருமளவு ஆதரவு இருந்தது மாத்திரமன்றி, இலங்கையிலும் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான விடுதலை நடவடிக்கைகள் தீவிரம் பெறத் தொடங்கின. யாழ்ப்பாணம் இதில் அதீத உந்துதல் கொண்டிருந்தது. மதசார்பின்மையும், இனவேறுபாடற்றதுமான தேசியத்துடன், பிரிட்டனிலிருந்து இலங்கையின் விடுதலையை வேண்டிய முதல் இயக்கமாக யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் 1924இல் தோற்றம்பெற்றது. இரண்டு ஆண்டுகளில் அது பின்னர், யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸாகியது.

டொனமூர் அரசியலமைப் பின்கீழ் இலங்கையின் முதல் சட்ட சபைத் தேர்தல் 1931இல் நடைபெற்றபோது, அந்த அரசியலமைப்பில் போதிய சுயாட்சி அதிகாரங்கள் இல்லை என்று தெரிவித்து, யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் தேர்தலைப் பகிஷ்கரித்தது.

1947இல் இந்தியா சுதந்திரம் பெற்ற மறு ஆண்டு, 1948இல் இலங்கை சுதந்திரம் பெற்றது. இலங்கையின் சுதந்திரத்துடன், காந்தியம் இலங்கைத் தமிழர்களின் அரசியல் சித்தாந்தமாகியது. அந்த கொள்கையுடன் 1949இல் தொடங்கப்பட்ட தமிழ் அரசு கட்சியின் தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் 'ஈழத்து காந்தி' என்றும் அழைக்கப்பட்டார்.

இந்தியாவில் சுமார் முப்பது ஆண்டுகளை நிறைத்த மகாத்மா காந்தியின் விடுதலைப் போராட்டம், தீரமும் துயரமும் நிறைந்த ஒரு தியாக வரலாற்றை பெருமையுற எழுதி வைத்திருக்கிறது. இலங்கையிலும் தமிழர்களுடைய உரிமைப் போராட்டம் முப்பது ஆண்டுகள் காந்திய வழியிலும், முப்பது ஆண்டுகள் ஆயுத வழியிலும் என்றாகியுள்ள போது, தன்னளவில் இந்தியாவை நிகர்த்த ஒரு காந்திய வழி போராட்ட வரலாற்றை இலங்கையில் தமிழர்களும் கொண்டிருப்பதாக கொள்ளலாம். சத்தியாக்கிரகம், ஹர்த்தால், திருமலை யாத்திரை, ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம், கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம், உண்ணாவிதரம், தேநீர்க் கடைப் பிரவேசம், சமபந்தி போசனம் என்று, தமிழ் அரசுக் கட்சி முன்னெடுத்த நடவடிக்கைகள் இந்த வரலாற்றை பெரிதும் எழுதிச் செல்கில்கின்றன.

இலங்கையில் எழுச்சிபெற்ற இக் காந்திய தத்துவ தமிழர் உரிமைப் போராட்ட வரலாற்றில் அந்த வரலாற்றின் நாயகியாகத் தெரிகின்ற பெண், மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம். அந்த வரலாறு அத்தகைய ஓர் எழுச்சிகொள்வதில் அவர் காண்பித்த அர்ப்பணிப்புடனான ஈடுபாடும் ஆளுமைமிக்க அவரின் ஆற்றல்களும் மிகப் பெருமளவில் துணையாயின.

கணவர் அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராகவிருக்கையில், பாராளுமன்றத்தில் பாண்டவர் சபையில் திரௌபதைபோல் அவர் நிறுத்தப்பட்டார். காந்திய வழி சாத்வீக போராட்டம் ஆயுதவழி மாற்றம்பெறத் தலைப்பட்ட காலத்தில் பிரதமராகவிருந்த ஜே. ஆர். ஜயவர்த்தன, தமிழீழ விடுதலைப் புலிகளையும் அதனையொத்த இயக்கங்களையும் தடைசெய்வதற்கான சட்டத்தைக் கொணர்ந்தார். சட்டமூலம் பாராளுமன்றத்தில் இரவிரவாக விவாதிக்கப்பட்டது. 'தந்தைப் புலி', 'தாய்ப் புலி' என்று சரமாரியாக, சபையின் எல்லாத் திசைகளிலிமிருந்து எய்யப்பட்ட அம்புகளை அமிர்தலிங்கம் தன் தீரத்தில் எதிர்த்து நின்றார்.

அமிர்தலிங்கம் கொலையுண்ட வேளையில் அவருடன் உடனிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணித் தவைர் மு. சிவசிதம்பரம் பின்னர் மரணமுற்ற போது, கொழும்பிலிருந்து அவரது உடல் அவரது ஊரான கரவெட்டிக்குக் கொண்டுசெல்லப்பட்டது. மற்றைய தலைவர்களுடன் மங்கையர்க்கரசியும் சென்றார். வழியில் கிளிநொச்சியில், தமிழீழ விடுதலைப் புலிகள் அஞ்சலி செலுத்தினார்கள். உடன் வந்தவர்களைத் தம் அலுவலகத்துக்கும் அழைத்தனர். மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் காரிலேயே இருந்தார். தமிழ்ச்செல்வன் அவரிடம் வந்தார்.

"நான் இங்கேயே இருக்கிறேன். எல்லாமே மக்களுக்கு நல்லதாக முடிந்தால், நல்லது" என்று தமிழ்ச்செல்வனிடம் அவர் சொன்னார்.

மகளிர் தினமான மார்ச் 9ஆம் திகதி, மங்கையர்க்கரசி மறைந்து ஐந்து ஆண்டுகள். நேற்றுமுன்தினம் மார்ச் 12ஆம் திகதி, மகாத்மா காந்தியின் தண்டி யாத்திரையின் 91ஆவது ஆண்டு, குஜராத்தின் சபர்மதி ஆச்சிரமத்தில் பிரதமர் மோடி தலைமையில், தேசிய ஒருமைப் பாட்டு நிகழ்வாக சிறப்பாக நடைபெற்றது.

●

# தேசியக்கொடி கால்மிதி விவகாரம்: சீன தூதரகம் வெளியிட்ட தகவல்!

கொழும்பு, மார்ச் 14

இலங்கையின் தேசியக் கொடியின் படம் பொறிக்கப்பட்ட கால் மிதிகளை சீன நிறுவனமொன்று தயாரித்த விடயம் சர்ச்சையானதையடுத்து, இலங்கையிலுள்ள சீன தூதரகம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அந்த உற்பத்தி நிறுவனத்தை தொடர்புகொள்ள, சீன தூதரகத்தை இலங்கை வெளிவிவகார அமைச்சு ஏற்கனவே தொடர்பு கொண்டிருந்தது.

இந்த நிலையில் சீன தூதரகம் வெளியிட்ட அறிக்கையில்,

"தேசிய கொடிகள் முழுமையாக மதிக்கப்பட வேண்டும். இந்த விவகாரத்திற்கு கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. இதே போன்ற தயாரிப்புகளை அமேசனில் பல்வேறு நாடுகளின் விற்பனையாளர்கள் விற்கிறார்கள். இலங்கையின் அமைதி, செழிப்பு மற்றும் கண்ணியம் என்பவற்றிற்காக பல தசாப்தங்களாக சீனா ஆதரவளித்து வருகிறது" என சீன தூதரகம் தெரிவித்துள்ளது.

# கல்வியமைச்சுக்கு தொலைபேசி அழைப்பேற்படுத்திய மாணவி

## *186ஆவது அழைப்பிலேயே பதில் கிடைத்தது*

கொழும்பு, மார்ச் 14

பத்தரமுல்லையிலுள்ள கல்வி அமைச்சிற்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்ட மாணவியொருவர், 186ஆவது முயற்சியில் அதிகாரிகளைத் தொடர்பு கொண்ட தகவல் வெளியாகியுள்ளது.

அநுராதபுரத்தை சேர்ந்த மாணவியொருவர் அவசர தேவை குறித்த தகவல்களைப் பெற பத்தரமுல்லை கல்வி அமைச்சுக்கு நேற்று முன்தினம் காலை முதல் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டுள்ளார்.

காலை 9 மணிக்கு முயற்சியை ஆரம்பித்தார். ஆனால் பதிலில்லை. அவசர தேவை கருதி முயற்சியை கைவிடாமல், தொடர்ந்து முயற்சித்தார்.

அவர் 185 முறை முயற்சித்தும் பலனிருக்கவில்லை. யாரும் பதிலளிக்கவில்லை. பிற்பகல் 1.30 மணியளவில் 186ஆவது முறையில்தான் பதிலளிக்கப்பட்டது.

பொதுச்சேவைகளின் நிலைமையை இந்த சம்பவத்தின் மூலம் புரிந்து கொள்ள முடியுமென சமூக வலைத்தளங்களில் விமர்சித்து வருகிறார்கள்.

# விமலுக்கு எதிராக வருகின்றது நம்பிக்கையில்லாப் பிரேரணை?



கொழும்பு, மார்ச் 14

அமைச்சர் விமல் வீரவன்ஸவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை முன்வைப்பது தொடர்பில் எதிரணி எம்.பிக்கள் சிலர் தீவிரமாக ஆராய்ந்துவருகின்றனர் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

இதற்கு ஏதுவான காரணிகள் தொடர்பில் கலந்துரையாடிவருவதுடன், பிரேரணையில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் குறித்தும் அவதானம் செலுத்தியுள்ளனர் எனவும் தெரியவருகின்றது.

அமைச்சர் விமல் வீரசன்ஸவுக்கு எதிராக அரசுக்குள்ளேயே எதிர்ப்புகள் வலுத்துவருகின்றன. குறிப்பாக சிறிலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

பஸில் ராஜபக்ஷவுக்கு மிகவும் நெருக்கமான 43 எம்.பிக்கள், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நேரில் சந்தித்து விமலுக்கு எதிரான முறைப்பாடுகளை முன்வைத்துள்ளனர். விமலால் ஆற்றப்பட்டுள்ள சில உரைகளையும் காணொளி வடிவில் பிரதமரிடம் சமர்ப்பித்துள்ளனர்.

இவ்வாறானதொரு பின்புலத்தில் நம்பிக்கையில்லா பிரேரணையொன்றை முன்வைத்தால் அது அரசுக்கு சவாலாக அமையும் எனவும், மொட்டு கட்சி உறுப்பினர்கள் கூட ஆதரவு வழங்கக்கூடும் எனவும் எதிரணி உறுப்பினர்கள் சிலர் கருதுகின்றனர். அதே போல் அரசின் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தைக்கூட ஆட்டம் காண வைக்கமுடியும் எனவும் கருதுகின்றனர்.

எனினும், நம்பிக்கையில் லாப் பிரேரணையொன்றை முன்வைத்தால் பிளவுபட்டிருக்கும் அரச கூட்டணி மீண்டும் ஐக்கியமாகக் கூடும் என்ற கோணத்திலும் சிலர் கருத்துகளை முன்வைத்துள்ளனர்.

எனவே, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடிய பின்னரே இது விடயம் தொடர்பில் இறுதி முடிவொன்று எடுக்கப்படக்கூடும்.

(அ)

ஈழநாடு



# 3 ஆவது அலைக்கான ஆபத்து இலங்கையில்!

## பொது சுகாதார ஆய்வாளர்கள் சங்கம் எச்சரிக்கை



கொழும்பு, மார்ச் 14

**இலங்கையில் பண்டிகைக் காலங்களில் 3ஆவது கொரோனா அலைக்கான ஆபத்து ஏற்பட்டுள்ளதாக பொது சுகாதார பரிசோதகர் சங்கத் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.**

எனவே, எதிர்வரும் பண்டிகைக் காலங்களில் கொரோனா வைரஸ் தொற்று நோயிலிருந்து மக்களைக் காப்பாற்றும் பொருட்டு அரசாங்கம் தகுந்த கொள்கை தொடர்பான தீர்மானங்களை எடுக்கவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

அவ்வாறில்லையெனில், 3ஆவது கொரோனா அலைக்கான ஆபத்தை எதிர்நோக்க வேண்டி வருமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பண்டிகை காலங்களில் இது குறித்து பொதுமக்கள் விழிப்புடன் செயலாற்றவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார். அதேநேரம், இயன்றவரை தங்களது பயணங்களை மட்டுப்படுத்த வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சுகாதார தொண்டர்களின் போராட்டம் தொடர்கிறது

யாழ்ப்பாணம், மார்ச் 14

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்னால் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் வடக்கு மாகாண சுகாதார தொண்டர்களின் உணவு தவிர்ப்பு போராட்டம் 6ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

கடந்த முதலாம் திகதியில் இருந்து போராட்டத்தில் ஈடுபட்டு வந்த வடக்கு மாகாண சுகாதார தொண்டர்கள் தமக்கான தீர்வு வழங்காத நிலையில் கடந்த 8 ஆம் திகதி தொடக்கம் தமது போராட்ட வடிவத்தை உணவு தவிர்ப்புப் போராட்டமாக மாற்றி முன்னெடுத்து வருகின்றனர்.

போராட்டம் இடம்பெறும் இடத்திற்கு ஒரு சில தமிழ் அரசியல் பிரதிநிதிகள் வருகை தந்திருந்த போதிலும் அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகள் இதுவரை வருகை தரவில்லை எனப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மேற்கு முனையம் வேலைத்திட்டம் இவ்வருடம் நடுப் பகுதியில் ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 14

கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தை நிர்மாணிப்பதற்கான வேலைத்திட்டம் இவ்வருடம் நடுப்பகுதியில் ஆரம்பமாகும் என்று துறைமுக அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ஜெனரல் தயா ரத்னாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

மேற்கு முனையம் தொடர்பில் இந்திய நிறுவனத்துடன் இணைந்து செயற்படுமாறு எமக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் நடவடிக்கை முன்னெடுக்கப்படும். சம்பந்தப்பட்ட தரப்புடன் பேச்சுகள் இடம்பெறுகின்றன.

சட்டமா அதிபரின் அனுமதி கிடைக்கப்பெற்ற பின்னர் எமது யோசனை அரசிடம் முன்வைக்கப்படும். அதன்பின்னர் சர்வதேச உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு, மேற்கு முனையம் கட்டியெழுப்பப்படும். 85 வீதம் முதலிடும் நிறுவனம் வசமும், 15 வீதம் துறைமுக அபிவிருத்தி அதிகார சபை வசமும் இருக்கும். இவ்வருடம் நடுப்பகுதியில் வேலைத்திட்டம் ஆரம்பமாகும்-என்றார்.

# கட்டுநாயக்கா வர்த்தக வலயத்தில் மேலும் 43 பேருக்கு தொற்று உறுதி

கொழும்பு, மார்ச் 14

கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலயத்தில் மேலும் 43 பேருக்கு கொரோன வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதன்படி, கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலையத்தில் புதிதாக 69 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகினர் என கொரோனா பரவலைத் தடுக்கும் தேசிய செயல்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (எ)

# வஹாப், ஜிஹாத் கொள்கைகளை பரப்பியவர் கைது



கொழும்பு, மார்ச் 14

இலங்கையில் வஹாப் மற்றும் ஜிஹாத் கொள்கைகளை பரப்பிய குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

மாவனெல்ல, முருத்தவளை பகுதியைச் சேர்ந்த 60 வயது ஜமாத் -இ -இஸ்லாமி அமைப்பின் முன்னாள் தலைவர் ரஷீட் ஹஜ்ஜுல் அக்பர் என்பவரே இவ்வாறு பயங்கரவாதத் தடுப்பு விசாரணைப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டார்.

இந்த நபர் கொழும்பு, தெமட்டகொடை பகுதியில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபர் மாவனெல்ல புத்தர் சிலை உடைப்பு விவகாரம் தொடர்பில் கைது செய்யப்பட்ட நபரின் நெருங்கிய உறவினர் என்பதுடன் ஜமாத் - இ- இஸ்லாமி அமைப்பின் வெளியீடுகளில் வஹாபிசம் மற்றும் ஜிகாத் கொள்கைகளை ஊக்குவிக்கும் கட்டுரைகளை எழுதி வந்துள்ளதாக பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.(எ)


**தீபம் கல்வி நிலையம்**

இல. 11, டேவிட் வீதி, யாழ்ப்பாணம்.

**யாழ். மாவட்டத்தில்...**

தனித்துவமான முன்னணி பாடசாலை ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவையில்

**A/L 2023 கலை, வர்த்தகப் பிரிவு**

**வர்த்தகப் பிரிவு**

கணக்கீடு - K.பாலகஜன் M.Com ( ACC. Spl.)
பொருளியல் - V. ஜெகதிஸ் BA (Hons) Eco. spl.
வணிகம் - S.K பாலசபேஷ் B.Com (HNDA)

**கலைப் பிரிவு**

தமிழ் - இ.இ. வசீகரன் B.A
புவியியல் - K.T. ஜெராட் B.A (Hons) Geo Spl.
அரசியல் - R. பாலகாந்தன்
கிறிஸ்தவ நாகரீகம் - J. சரோன் B.A (Hons) Chri. Civil Spl.
வரலாறு - (K. கலைச்சந்திரன் B.A (Hons), PGDE
ICT - N. நிரோஜன் B.Sc in Computer Science

A/L 2021, A/L 2022 வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

A/L 2023 ஆரம்பம்

15.03.2021 மாலை 3.00 மணி

தீபம் எம் பிள்ளைகளின் எழுச்சிமிகு எதிர்காலம்

தொடர்பு: 077 2247781

நிர்வாகி


# மாகாணசபை தேர்தலை விரைவில் நடத்துமாறு ஐ.தே.க. வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 14

மாகாணசபை தேர்தலை விரைவாக நடத்தி மக்கள் பிரதிநிதிகளை நியமிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் மாகாண சபையில் பெண்கள் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கான பிரேரணை ஒன்றையும் கட்சியின் பெண்கள் அமைப்பு நிறைவேற்றி இருக்கின்றது என ஐக்கிய தேசிய கட்சி கண்டி மாவட்ட தலைவி சாந்தினி கோன்காகே தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தாவில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்-

மாகாணசபை தேர்தலை நடத்தி அதற்கான மக்கள் பிரதிநிதிகளை நியமிக்காமல் அரசாங்கம் மாகாணசபைக்கு உரித்தான நிறுவனங்களின் நிர்வாகத்தை அரச அதிகாரிகளுக்கு கீழ் கொண்டுவர நடவடிக்கை எடுத்துவருகின்றது. மக்கள் பிரதிநிதிகளால் நிர்வகிக்கப்பட வேண்டிய நிறுவனங்களை அரச அதிகாரிகளை நியமித்து, அரசாங்கத்துக்கு தேவையான முறையில் இதன் நிர்வாகத்தை மேற்கொள்வதை அனுமதிக்க முடியாது. அதனால் மாகாணசபை தேர்தலை நடத்துவதை தொடர்ந்தும் காலம் கடத்தாமல் விரைவாக நடத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும்.

அத்துடன் மாகாணசபையில் பெண்கள் பிரதிநிதித்துவத்தை 25 வீதமாக அதிகரிப்பதற்கான பிரேரணை ஒன்றையும் கட்சியின் பெண்கள் அமைப்பு நிறைவேற்றி இருக்கின்றது. சர்வதேச பெண்கள் தினத்திலே இந்த பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

மேலும் 2017ஆம் ஆண்டு பிரதேச சபைத் தேர்தலில் பெண் வேட்பாளர்களுக்கு 25 வீத கோட்டாவை அறிமுகப்படுத்தியது ஐக்கிய தேசிய கட்சியாகும். அதேபோன்றதொரு பிரேரணையை மாகாண சபையிலும் உள்வாங்க மாகாணசபை சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளவும் பிரேரித்திருக்கின்றோம்-என்றார்.


**சிறப்பு சலுகை**

ஆரோக்கியா பல் வைத்தியசாலையில்

வழங்கப்படும் பல் வைத்திய சேவைகளுக்கான ஆரம்பகால கட்டண சலுகைகளைப் பெற்றுக்கொள்ள

**இன்றே விரைந்திடுவீர்**

AAROKYA DENTAL CARE

Petrol Shed Lane,Nelliyady.

074070 2241, 0759759828

# மாகாணசபை தேர்தலை மிக விரைவாக நடத்துக!

## ஜனாதிபதி கோட்டாபய பணிப்புரை



கொழும்பு, மார்ச் 14

**மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள சட்ட வரைவு அல்லது அதில் உள்ள குழப்பங்களை நீக்கி அந்தத் தேர்தலை விரைவாக நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.**

ஜனாதிபதி அலுலகத்தில் சிறிலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் மாகாண சபை குழுவுடன் நேற்று முன் தினம் இடம்பெற்ற சந்திப்பின்போதே அதிகாரிகளுக்கு ஜனாதிபதி இந்த பணிப்புரையை விடுத்துள்ளார்.

தொகுதி முறை, எல்லை நிர்ணயம், ஐம்பதுக்கு ஐம்பது சதவீத பெண்களின் பிரதிநிதித்துவம் உள்ளிட்ட கடந்த அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட சட்ட வரைவு அவர்களினாலேயே தோற்கடிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

மாகாண சபைகள் இப்போது மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் செயற்பட்டு வருகின்றன.

இந்த நிலைமை குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தித் தேர்தல்களை விரைவாக நடத்த வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி வலியுறுத்தினார்.

"நாட்டின் தேசியத்துக்கும் பாதுகாப்புக்கும் முன்னுரிமை அளித்து கட்சியின் கொள்கைகள் மற்றும் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றி, கடந்த 15 மாதங்களில் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஒரு தேசியவாத அரசாங்கம் ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், அதனை வீழ்த்துவதற்கு உள்நாட்டு மற் றும் வெளிநாட்டு சக்திகள் செயற்பட்டன.

மஹிந்த ராஜபக்ஷவை வெளியேற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட தவறான பிரசாரங்களுக்கு பலியாகி கடந்த ஐந்து ஆண்டுகளில் நாடு எவ்வளவு தூரம் பின்னடைந்துள்ளது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த சக்திகள் அரசாங்கத்தின் தற்போதைய திட்டங்களையும் தோற்கடிகப்பதற்கு மீண்டும் முயற்சிக்கின்றன.

அதற்குப் பலியானால் ஏற்படும் விளைவுகள் குறித்து பொதுமக்களுக்கு அறிவுறுத்துவதன் முக்கியத்துவத்தை தெளிவுபடுத்தவேண்டும்.

ஏப்ரல் 21 தாக்குதல்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை சம்பந்தமாக எதிர்க்கட்சியினர் பல்வேறு கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

பேராயரின் அனுமதியுடனும், நம்பிக்கையின் அடிப்படையிலுமே ஆணைக் குழுவின் பணிகளைத் தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பெப்ரவரி மாதம் முதலாம் திகதி கையளிக்கப்பட்ட இந்த அறிக்கை 28 நாட்களுக்குள் அமைச்சரவைக்கும் பாராளுமன்றத்திற்கும் சமர்ப்பிக்கப்பட்டது.

ஆனால் ஆணைக்குழுவின் அறிக்கையை மறைக்க முயற்சிப்பதாக எதிர்க்கட்சிகள் தவறான பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றன" என்று ஜனாதிபதி கோட்டாபய தெரிவித்தார்.

# யாழ்.குடாநாட்டில் புலிகளை மீளுருவாக்க முயற்சியாம்!

## ஆராய வருகிறார் சரத் வீரசேகர



கொழும்பு, மார்ச் 14

விடுதலைப் புலிகளை மீளுருவாக்க யாழ்ப்பாணத்தில் தமிழ் அரசியல்வாதிகள் முயற்சிப்பது பற்றிய தகவல் கிடைத்துள்ளது. இது பற்றி ஆராயவும், பாதுகாப்பு நட வடிக்கைகளை ஒழுங்கமைக்கவும் பொதுப்பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர அடுத்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளார் என சிங்கள ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

போரின் போது தப்பிய விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் இப்போது வடக்கு மக்களுடன் தொடர்பு கொள்வதாக தகவல் கிடைத்துள்ளது. போராட்டங்கள் என்ற போர்வையில் தமிழ் அரசியல்வாதிகள் விடுதலைப் புலிகளை மீளுருவாக்க முயற்சிக்கிறார்கள். இது குறித்து தகவல் கிடைத்துள்ளதால், பாதுகாப்புத்தரப்பினர் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். தமிழ் அரசியல்வாதிகளின் எண்ணம் ஒருபோதும் ஈடேறாது என அமைச்சர் வீரசேகர தெரிவித்தார் என அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலைமையை ஆராயவும், பாதுகாப்பு தரப்பினருக்கு வேண்டிய ஆலோசனையை வழங்கவும், அடுத்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு நேரில் செல்லவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# 46 கைதிகளுக்கு தொற்று உறுதி

கொழும்பு, மார்ச் 14

தனிமைப்படுத்தப்பட்டிருந்த 46 சிறை கைதிகளுக்கு நேற்று முன்தினம் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

காலி, களுத்துறை மாவட்டங்களில் நீதிமன்ற உத்தரவின் படி சிறை வைக்கப்பட்ட கைதிகள், பூஸா சிறைச்சாலையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில், தற்போது அவர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

# சைவத்திருக்கோவில் ஒழுங்கு வழிகாட்டல் நிபுணர் குழு கீரிமலையில் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், மார்ச் 14

சைவ அமைப்புக்களின் ஒருங்கிணைந்த கட்டமைப்பான சைவத்தமிழர் பேரவையின் திருக்கோவில் வழிகாட்டல் ஒழுங்குக்கான பரிந்துரைகளை மேற்கொள்ள நிபுணர் குழுவை பல்வேறு சமய அமைப்புக்களின் பிரதிநிதிகள் கீரிமலையில் கூடி அங்குரார்ப்பணம் செய்தனர்.

ஓய்வுபெற்ற நீதிபதி, முன்னாள் சைவபரிபாலன சபைத் தலைவர் திரு.வசந்தசேனன் இந்த நிபுணர் குழுவின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சிவராத்திரி நன்னாளில் கீரிமலை குழந்தை வேல் சித்தர் பீடத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கீரிமலை மெய்கண்டார் ஆதீனம் தவத்திரு உமாபதி சிவம் அடிகளார் திருமுன்னிலை வகித்தார்.

கோவிலைத் தழுவிய குடிகள் குடிகளைத் தழுவிய கோவில் என்ற மையக்கருவை சைவத் தமிழ் மக்களிடையே வலுப்படுத்த பல்வேறு விடயதானங்களில் இந்த நிபுணர் குழு கருத்துக்களை, ஆலோசனைகளை சைவப் பெரியார்கள், தர்மகர்த்தார்கள் குருமாரிடம் கேட்டறிய இருப்பதாக நிகழ்வின் ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவராகிய சைவ மகா சபைப் பொதுச் செயலாளர் மருத்துவர் பரா. நந்தகுமார் தெரிவித்தார்.

மெய்கண்டார் ஆதீனம் தனது ஆசியுரையில், கோவில்களில் முழுமையான சமூக மைய பரிணாமத்துடன் மக்களை ஆற்றுப்படுத்தும் முன் மாதிரி யான வழிபாட்டு முறைகள் பின்பற்றப்படுதல் உறுதிப்படுத்தப்படவேண்டும் எனவும் நிதியை முன்னிலைப் படுத்தி கிரியைகள் மேற்கொள்ள கோவிலில் உள்ள பொறுப்பு வாய்ந்த எவரும் இடங்கொடுக்கக்கூடாது எனவும் குறிப்பிட்டார்.

நிபுணர் குழுவை வழிநடத்தவுள்ள முன்னாள் நீதிபதி வசந்தசேனன், பல்வேறு பெரியவர்களை இக்குழு எதிர்காலத்தில் உள்வாங்கி கோவில் தர்மகர்த்தாக்கள், குருமார்கள், தொண்டர்கள், அடியவர்களின் பங்கும் பணியும் மேம்படுவதற்கான பல வழிகாட்டல் பரிந்துரைகளை தயாரிக் கும் என குறிப்பிட்டார்

அறநெறிப் பாடசாலை, அறப்பணி நிதியம் , திருக்கோவிலின் ஆளுகைக்குட்பட்ட மக்களின் பிரச்னைகளை தீர்க்கும் பொறிமுறைகள், திருக்கோவில் பொருளாதாரத்தை அனைத்து மக்களுடனும் பகிர்ந்து கொள்ளல் என பல விடயங்கள் நிகழ்வில் கலந்துகொண்ட பெரியோர்கள், துறைசார் புலமையாளர்கள், சிவதொண்டர்களால் முன்வைக்கப்பட்டது.

தற்கால நிலைமையும் ஏனைய மாவட்ட பிரதி நிதிகளின் கருத்துக்களை கேட்கவும் வசதியாக தொடர் நிகழ்நிலை (Zoom) கலந்துரையாடல்களை யும் முன்மொழிவு எழுத்தாவணங்களையும் அனைத்து தரப்பினரிடையே பெற்று கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

ஈழநாடு
Online
சம்பவங்கள்,
செய்திகள்
உடனுக்குடன்
அறிந்துகொள்ள...
www.eelanadu.lk

# முஸ்லிம் மக்களை பழிவாங்கும் அரசு: ஐ.நா. செல்லவேண்டிவரும்! - ரிஷாத்



கொழும்பு, மார்ச் 14

முஸ்லிம்களை வேண்டுமென்றே பழிவாங்கும் வகையில் அரசு செயற்படுகின்றது. அதிலும், குறிப்பாக அமைச்சரவையிலுள்ள விமல் வீரவன்ஸ, மஹிந்தானந்த அளுத்கமகே ஆகியோர் தங்கள் இன வெறி, மத வெறி பிரசாரங்களைப் பகிரங்கமாகவே மேற்கொண்டு வருகின்றனர். இதற்கு எதிராக சட்ட நடவடிக்கையை நாடியுள்ளேன் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் உண்மையான குற்றவாளிகள் யாராக இருந்தாலும் அவர்கள் அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

ஆனால், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் இடம்பெற்றது முதல் என் மீதும், என் சமூகத்தின் மீதும் இல்லாத, பொல்லாத குற்றச்சாட்டுக்களை அரசிலுள்ள சிலர் சுமத்தி வருகின்றனர். அதில் அமைச்சர்களான விமல் வீரவன்ச, மஹிந்தானந்த அளுத்கமே ஆகியோரின் உளறல்கள் உச்சத்தில் உள்ளன.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பின்னர் 2 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் கைதுசெய்யப்பட்டனர். அதில் 250 இற்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் மட்டும் தற்போது சிறைகளில் இருக்கின்றார்கள். ஏனையோர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

என்னையும் பல தடவைகள் அழைத்து விசாரணை செய்து சிறையில் அடைக்க முயன்றனர். ஆனால், குற்றச்சாட்டுக்கள் எதுவும் நிரூபிக்க முடியாத சந்தர்ப்பத்தில் என்னை விடுவித்தனர்.

தேவையில்லாமல் என்னைச் சீண்டிப் பார்க்கும் அமைச்சர் விமலுக்கு எதிராக சி.ஐ.டியில் முறைப்பாடு செய்துள்ளேன். அடுத்த வாரம் அவருக்கு எதிராக மேலதிக சட்ட நடவடிக்கையையும் நாடவுள்ளேன்.

முஸ்லிம் சமூகத்தை இந்த அரசு தொடர்ந்து அடக்க முயன்றால் அதன் விபரீதங்கள் ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச மட்டத்தில் உச்சத்தில் இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிவைக்க விரும்புகின்றேன்- என்றார்.

# தென் மாவட்டத் தொகுதிகளை அதிகமாக குறிவைக்கும் பா.ஜ.க.

**ஏ.ஆர்.மெய்யம்மை**




வரவிருக்கும் தமிழ்நாடு சட்டப் பேரவை தேர்தலில் அதிமுக தலைமை யிலான கூட்டணியில் பாரதிய ஜனதா கட்சிக்கு 20 தொகுதிகள் ஒதுக்கப்பட் டுள்ளது. மாநிலமெங்கும் பரவலாகத் தான் போட்டியிடும் இடங்களை பா.ஜ.க. தேர்ந்தெடுத்துள் ளது போல் தோன்றினாலும் தென் மாவட்டங் களிலேயே அதிக தொகுதிகளில் கள மிறங்குகிறது.

இதுவரை அதிமுக 177 தொகுதிகளி லும், அதன் தோழமை கட்சிகளான பா.ம.கவும் பா.ஜ.கவும் முறையே 23 மற்றும் 20 தொகுதிகளில் போட்டியிடு கின்றன.

கடந்த வெள்ளிக்கிழமை அ.தி.மு.க வுடன் கையெழுத்தான தொகுதி பங்கீட் டின்படி பா.ஜ.க. தமிழகத்தில் 20 சட் டப்பேரவை தொகுதிகளுடன் கன்னியா குமரி மக்களவை இடைத் தேர்தலிலும் போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்டது. காங்கிரஸ் எம்.பி. வசந்தகுமாரின் இறப்பினால் காலியாக இருக்கும் கன்னியாகுமரி மக்களவை தொகுதி இடைத்தேர்தல், சட்டப்பேரவை தேர்தலுடன் சேர்ந்து ஏப்ரல் 6ஆம் திகதி நடக்கவுள்ளது.

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, அதிமுக தலைவர்களான முதலமைச் சர் எடப்பாடி பழனிசாமி மற்றும் துணை முதலமைச்சர் பன்னீர்செல்வத்து டனும் பேச்சு நடத்திய பிறகே இரண்டு கட்சிகளுக்குமான தொகுதி பங்கீடு கையெழுத்தானது. பா.ஜ.க. கொங்கு மண்டலத்தில் அதிகமான தொகுதிகளை கோரியதால் தான் தொகுதி பங்கீடு தாமதமானதாகக் கூறப்பட்டது.

இந்த நிலையில் கோவை தெற்கு, மொடக்குறிச்சி, அரவக்குறிச்சி, உதகமண்டலம், தாராபுரம், தளி ஆகிய தொகுதிகள் மேற்கு மண்டலத்தில் பா. ஜ.க.வுக்கு ஒத்துக்கப்பட்டன. தென் மாவட்டங்களை பொறுத்தவரை ஒதுக் கீட்டில் பெரிதாக பிரச்னை எழவில்லை என்று கூறுகின்றனர் பா.ஜ.கவினர்.

அதனால் அதிகபட்சமாக 8 இடங் களில் இங்கே போட்டியிடுகிறது. ஆறு தொகுதிகளை கொண்ட கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டுமே நாகர்கோவில், குளச்சல், விளவன்கோடு ஆகிய 3 தொகுதிகளில் பா.ஜ.க. களமிறங்குகிறது. அதுபோக இராமநாதபுரம், விருதுநகர், திருநெல்வேலி, காரைக்குடி, மதுரை வடக்கு ஆகிய தொகுதிகளை பெற்றுள்ளது.

இதில் கோவை தெற்கு, உதகமண் டலம், குளச்சல், விளவன்கோடு மற்றும் காரைக்குடியில் மற்றொரு தேசிய கட்சி யான காங்கிரசுடன் நேரடியாக மோதுகி றது.

கன்னியாகுமரி மக்களவை தொகுதியி லும் சரி, இம்மாவட்டத்தில் உள்ள மூன்று சட்டப்பேரவைத் தொகுதிகளி லும் சரி, வெற்றி பெற்றுவிடுவோம் என்ற நம்பிக்கையுடனேயே பா.ஜ.க. இருக் கிறது. கிறிஸ்தவர்களும் இந்து நாடார் களும் அதிகம் வாழும் இங்கே, மத ரீதி யான அணி திரட்டல் அடிப்படையி லேயே வாக்குகள் செலுத்தப்படுகின்றன.

2016 சட்டப்பேரவை தேர்தலில் திமுக - காங்கிரஸ் கூட்டணியில் நாகர் கோவிலில் தி.மு.கவின் சுரேஷ் ராஜனும், குளச்சல் மற்றும் விளவன்கோட்டில் காங்கிரஸ் சார்பாக நிறுத்தப்பட்ட ஜெ. ஜி. பிரின்ஸும் எஸ். விஜயதாரிணியும் வெற்றி பெற்றார்கள். பாஜக இப்போது போட்டியிடும் மூன்று தொகுதிகளிலும் தனித்து நின்று இரண்டாம் இடத்தைப் பிடித்தது. தனித்து போட்டியிட்ட அ. தி.முகவோ நாகர்கோவிலிலும் குளச்சலி லும் மூன்றாம் இடத்தையும் விளவன் கோட்டில் நான்காவது இடத்தையுமே பெறமுடிந்தது.

இரு கட்சியினரும் சேர்ந்து பெற்ற வாக்குகள் திமுக கூட்டணியைவிட அதி கமே. இதனால் இப்போதுள்ள கூட் டணி பலத்தைக் கொண்டு வெற்றி பெற்றுவிட முடியும் என்று நம்புகின்ற னர் பா.ஜ.கவினர்.

இஸ்லாமியர்கள் மற்றும் இந்து மற வர்கள் அதிகம் வசிக்கும் இராமநாத புரத்திலும், மத ரீதியான துருவப்படுத் தலைக் கொண்டு வாக்குகள் பிரிகின்றன. கடந்த தேர்தலில் இத்தொகுதி மக்கள் அதிமுக வேட்பாளர் மணிகண்டனை சட்டமன்றத்திற்கு அனுப்பிவைத்தனர். திமுக கூட்டணியில் போட்டியிட்ட ஜவாஹிருல்லாஹ் இரண்டாம் இடத்தை யும், மக்கள் நலக் கூட்டணியின் சார்பில் போட்டியிட்ட தே.மு.தி.க. மூன்றாம் இடத்தையும், பா.ஜ.க. நான்காம் இடத் தையும் பிடித்தன.

இம்முறை தினகரன் தலைமையிலான அ.ம.மு.க. கணிசமான வாக்குகளை பிரிப்பதற்குண்டான வாய்ப்புகள் உள்ள போதிலும், பா.ஜ.க. இத்தொகுதியை தேர்ந்தெடுத்திருப்பது இந்து வாக்கு களை அறுவடை செய்ய முடியும் என்ற நம்பிக்கையில் தான் என்கின்றனர் அக்கட்சியினர்.

திருநெல்வேலி மக்களுக்கு நன்கு பரிச்சயப்பட்ட முன்னாள் அமைச்சர் நயினார் நாகேந்திரன் பா.ஜ.க. வேட்பா ளராக அங்கு களம் காண்பார் என்று தெரிகிறது. கட்சி தலைமை அதிகாரபூர் வமாக அறிவிப்பதற்கு முன்பே நெல்லை சட்டமன்றத் தொகுதி வேட்பாளராக தேர்தல் அலுவலரிடம் மனு தாக்கல் செய்தார். கடந்த தேர்தல் வரை அதிமுக விசுவாசியாக இருந்த அவர் சொற்ப வாக்குகளில் தான் தி.மு.க.வின் எ.எல்.எஸ். லெட்சுமணனிடம் தோற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. தி.மு.க. சார் பில் மீண்டும் லெட்சுமணனே போட்டி யிடுகிறார்.

ஜெயலலிதாவின் மறைவிற்கு பிறகு பா.ஜ.கவிற்கு தாவிய நாகேந்திரனுக்கு அக்கட்சி மாநிலத் துணை தலைவர் பதவி கொடுத்தது. கவிஞர் வைரமுத்து வின் பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான ஆண்டாள் குறித்த பேச்சுக்கு கண்டனம் தெரிவித்து நெல்லையில் நடந்த ஆர்ப் பாட்டத்தில் வன்முறையை தூண்டும் விதமாகப் பேசி மேலும் சர்ச்சையை கிளப்பினார். அதனால் அவர் மீது பொலிஸார் வழக்கு பதிவும் செய்தனர்.

காரைக்குடியை பொறுத்தமட்டில் அங்கு உள்ள வாக்காளர்களுக்கு நன்கு அறிமுகமான பா.ஜ.கவின் சர்ச்சைக்குரிய தலைவர் எச். ராஜா போட்டியிடுவார் என்று தெரிகிறது. அவர் 2001இல் பா. ஜ.க. திமுக கூட்டணியில் இருந்த போது காரைக்குடி சட்டமன்ற உறுப்பினராக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிறகு போட்டியிட்ட 2006 மற்றும் 2016 சட்டமன்ற தேர்தல்களிலும் 2019 பாராளு மன்றத் தேர்தலிலும் தோல்வியை தழுவி னார். காங்கிரஸுடன் ஒப்பிடுகை யில் அவரது களப்பணி நன்றாகவே இருப்ப தாக உள்ளூர் மக்கள் கூறுகின்றனர்.

"மத்தியில் உள்ள பாஜக அரசின் நாடு முழுவதும் உள்ள 117 பிற்படுத்தப்பட்ட மாவட்டங்களை முன்னேற்றுவதற்கான திட்டத்தின் கீழ், விருதுநகரும் இராம நாதபுரமும் தேர்ந்தெடுக்கப்பட்டு நிதி அமைச்சர் நிர்மலா சீதாரமானின் நேரடிப் பார்வையில் வளர்ச்சி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதே இந்த இரண்டு தொகுதிகளையும் தேர்ந் தெடுக்க காரணம். அதே போல் மதுரை யிலும் பாஜகவினர் கடந்த சில ஆண்டு களாக தீவிர களப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர். அதனால் கணிசமான வாக்குகளை பெறமுடியும் என்று நம்பு கின்றனர்," என்கிறார் மூத்த பத்திரிகை யாளரும் பா.ஜ.க. அறிவுசார் பிரிவின் முன்னாள் மாநில செயலாளருமான சாஸ்திரி மல்லாடி.

விருதுநகர் மாவட்டத்தை சேர்ந்த அமைச்சர் கே. டி. ராஜேந்திர பாலாஜி யின் ஆதரவோடும் வணிகர் சமூகமான நாடார் சமூகத்தின் ஆதரவோடும் வாக்கு களை எளிதில் பெறமுடியும் என்ற நம்பிக்கையில் விருதுநகர் தொகுதியை கேட்டு வாங்கி யுள்ளதாக கூறுகின்றனர் பா.ஜ.க. நிர்வாகிகள்.





எனினும் திமுகவுடன் நேரடியாக மோதும் நாகர்கோவில், திருநெல்வேலி, விருதுநகர், இராமநாதபுரம், மதுரை வடக்கு ஆகிய தென் தொகுதிகளில் பா.ஜ.க. விற்கு வெற்றி வாய்ப்பு கடின மானதாகவே இருக்கும் என்கின்றனர் அரசியல் நோக்கர்கள்.

நன்றி.பி.பி.சி

ஈழநாடு



# ஜெனிவா அரசியலில் ஈழத்தமிழர் 'அற'வியல்

**——— பனங்காட்டான்**



பெரும்பாலான தமிழர் மத்தியில் இன்று எழுந்திருக்கும் முக்கியமான கேள்வி, ஜெனிவாவில் இம்முறை என்ன நடைபெறும் என்பதே. ஒருவ ரோடு ஒருவர் தொடர்பு கொள்ளும் போதும் இதே கேள்விதான் எழுகிறது.

ஒரு வார்த்தையில் பதில் சொல்வதானால், சத்திரசிகிச்சை வெற்றி - நோயாளி படுக்கையில்.

கடந்த பல வருடங்களாக ஜெனிவா அமர்வு ஆரம்பிக்கும்போது ஏதோ ஒரு வகை நம்பிக்கை வெள்ளித் துருவமாக காட்சி தரும். அமர்வு முடியும்போது முன்னைய காலங்கள் போல சப்பென்றாகிவிடும். இதுதான் வரலாறு.

ஓரளவுக்கு இதையெல்லாம் முற்கூட்டியே தெரிந்து கொண்டதால்தான் இலங்கை அரசு எதற்கும் அச்சப்படாமல், எல்லாவற்றையும் தூக்கியெறிந்து பேசுவதை நடைமுறையாகக் கொண்டுள்ளது.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் 47 நாடுகள் கூடி, அதில் 24 நாடுகள் பெரும்பான்மையாகி, இலங்கை மீது பொறுப்புக் கூறலையும் சர்வதேச நீதி விசாரணையையும் வலியுறுத்தும் தீர்மானத்தை ஏன் எடுக்க முடியாது? இதில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு நாட்டுக்கும் அதன் அரசியல் சார்ந்த, பக்கம் சார்ந்த, பாரபட்சமான, நீதிக்குப் புறம்பான முடிவெடுக்கும் சூழல் அமைந்திருப்பதே இதற்கான முக்கிய காரணம்.

தற்போதைய மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பச்சிலற் அம்மையார் தமது சகல அறிக்கைகளிலும் இலங்கையின் சகல மனித உரிமை மீறல்களையும் அப்பட்டமாக எடுத்துக்கூறி, போர்க்குற்றம் புரிந்த இராணுவத்தினர் மீது எவ்வகையான தடைகளை கொண்டுவர வேண்டுமென நீதியின் பாற்பட்ட பரிந்துரைகளை முன்வைத்திருந்தார்.

இலங்கை மீதான தீர்மானத்தை சமர்ப்பித்த கூட்டுத் தலைமை நாடுகள் (பிரித்தானியா, கனடா உட்பட) இந்தப் பரிந்துரைகளை உள்வாங்கியிருந்தால் ஏதாவது நம்பிக்கை ஏற்பட்டிருக்கும்.

ஜனநாயகப் பொதுவெளியிலுள்ள இடைவெளியை இந்த நாடுகள் சரியாகப் பயன்படுத்த முன்வரவில்லை. தாயக தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளும் அப்படித்தான்.

பேரவையின் 46ஆவது அமர்வு கடந்த மாதம் ஆரம்பமானபோது ஏதோவொரு புள்ளியில் ஒன்றுபட்டு, மூன்று கட்சி களின் தலைமைகளும் ஒப்பமிட்டு பேர வைக்கு கடிதம் (மகஜர்) அனுப்பினர். ஆனால், பேரவையின் இந்த அமர்வு முடிவடைவதற்கு முன்னரே அவர்கள் பிரிந்துவிட்டனர். இது, பச்சை மண்ணும் சுட்ட மண்ணும் ஒட்டாது என்ற பழைய கதைதான்.

கூட்டமைப்பின் சுமந்திரன் தன்னிச்சையாக எடுக்கும் முடிவுகளை, அதன் தலைவரென(?) கூறப்படும் சம்பந்தன் கண்களை மூடிக்கொண்டு ஆதரித்து அறிக்கை விடும் செயற்பாடு தொடர்கிறது. கஜேந்திரகுமாரின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சுமந்திரனின் அறிக்கையை வாட்டியெடுத்ததுடன் இனிமேல் அவர்களுடன் கூட்டுச்சேர முடியாதென அறிவித்தது. சம்பந்தனின் அறிக்கையை கண்டித்துள்ள ரெலோவின் செல்வம் அடைக்கலநாதன், அந்த அறிக்கைக்கும் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ரெலோவுக்கும் சம்பந்தம் இல்லையென அறிவித்துள்ளார்.

இலங்கையில் தொடர்ச்சியாக பல்வேறு வகையான அரசியல் போராட்டங்களை - சாத்வீக வழியாகவும் ஆயுத ரீதியாகவும் முன்னெடுத்தவர்கள் தமிழர்களே. அவ்வேளையில், மதரீதியில் தம்மைப் பிரித்துப் பார்க்கும் இஸ்லாமியர்கள் இப்போராட்டங்களை ஆதரிக்கவில்லை. மாறாக, இப்போராட்டங்களைக் காட்டிக் கொடுப்பவர்களாக, சிங்கள அரசாங்கங்களின் சுவீகார துணைப்படையாளர்களாக இயங்கி வந்தனர். ஆனால், கத்தோலிக்க மதகுருமார் அவ்வப்போது தமிழர் போராட்டங்களுக்கு ஆதரவு வழங்கியுள்ளனர்.

இன்று உருவாகியிருக்கும் அரசியல் நிலைமை முற்றிலும் மாறானது. சிங்கள பௌத்த காவலர்களாக ராஜபக்ஷக்கள் தங்களை அடையாளம் காட்டுவதும், எதேச்சாதிகார தலைவராக கோட்டாபய ஒரு கையில் துப்பாக்கியுடன் காட்சி கொடுப்பதும், மக்கள் எண்ணிக்கையில் சிறுபான்மையினரான பௌத்தர்கள் அல்லாதவர்களை ஒன்றுபட வைத்துள்ளது.

ஜனநாயக சோசலிச குடியரசு என்னும் இலங்கை இப்போது இனநாயக நாடாக மாறியுள்ளதால், சிங்கள பௌத்த ஆட்சியில் நீதியைப் பெற முடியாத பௌத்தர்கள் அல்லாதவர்கள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் என்ற பொறிமுறையை கோருகின்றனர். இவ்வாறான ஒரு சூழ்நிலை இக்காலத்தில் வருமென ராஜபக்ஷக்கள் நினைத்திருக்க மாட்டார்கள்.

இவ்வாறான சாதகமான சந்தர்ப்பத்தில் இதனை சரியாகப் பயன்படுத்த முடியாத கூட்டமைப்பின் தலைமை, உப்புச்சப்பற்ற ஜெனிவா தீர்மானத்தை உறுப்பு நாடுகள் ஆதரிக்க வேண்டுமென்று கோரிக்கை விடுப்பதை அனுமதிக்க முடியாது.

ஐந்தாண்டு காலம் மைத்திரி - ரணில் நல்லாட்சிக்கு முண்டு கொடுத்த கூட்டமைப்பு, இப்போது ராஜபக்ஷக்களின் தனியாட்சிக்கு பக்கபலமாக மாறிவருவதை இதனூடாகக் காணலாம்.

இலங்கை விவகாரத்தைக் கையிலெடுத்த ஆறு நாடுகளும் இதுவரை இரண்டு வரைபுகளை பேரவையின் முன்னால் வைத்துள்ளன. முதலில் வெளியான வரைபே, முதற்கோணல் முற்றுங்கோணலாக அமைந்தது. 2015ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரையான பேரவை அமர்வுகளில் நிறைவேற்றப்பட்ட 30:1 இலக்க, 34:1 இலக்க 40:1 தீர்மானங்களின் அச்சொட்டான தொடராகவே இந்த வரைபுகளைப் பார்க்கலாம்.

இதனை எழுதிக் கொண்டிருக்கும் மார்ச் மாதம் 11ஆம் திகதி வியாழக்கிழமை இரண்டாவது வரைபு பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டது. முடிந்தால் சில திருத்தங்களை இதில் கொண்டுவர வாய்ப்புண்டு. இல்லையேல், இந்த மாத இறுதியில் இதன் மீது வாக்கெடுப்பு இடம்பெறும்.

"நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் என்பவற்றுக்கு இலங்கையின் மனித உரிமைகள் நிலைமை பற்றி எழுத்து மூலமான அறிக்கையை பேரவையின் 49ஆவது அமர்வில் மனித உரிமை ஆணையாளர் சமர்ப்பிக்க வேண்டும். அத்துடன் பொறுப்புக்கூறல் தொடர்பாக பேரவையில் விவாதிப்பதற்கு அனைத்தையும் உள்ளடக்கிய விரிவான அறிக்கையை ஆணையாளர் 51ஆவது அமர்வில் சமர்ப்பிக்க வேண்டும்" என்பதே இந்த வரைபுகளின் இறுதி வாசகம்.

> **இனநாயக நாடாக மாறியுள்ள ஒரு நாட்டைப் பாதுகாக்கும் நோக்குடன் மனித உரிமைகள் பேரவையின் நாடுகள் தொடர்ந்து இயங்குகின்றன. பொறுப்புக்கூறலுக்கும், நீதிப் பொறிமுறைக்கும் கால நீடிப்புத்தான் இவர்களின் தீர்ப்பு என்றால் மனித உரிமைகள் பேரவை என்பதன் பெயரே கேள்விக்குரிய தாகின்றது. சர்வதேச அரசியலில் ஈழத்தமிழரின் 'அற'வியலுக்கு எப்போது நீதி கிடைக்கும்?**

2022ம் ஆண்டு மார்ச் மாதம் 49ஆவது அமர்வு இடம்பெறும். 2022ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 51ஆவது அமர்வு இடம் பெறும்.

அப்படியென்றால், இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல், சர்வதேச நீதிப் பொறிமுறை என்பவை ஒரேயடியாக 18 மாதங்களுக்கு பின்னோக்கித் தள்ளப்படுகிறது. அதற்குப் பின்னரும் 2023, 2024 என்று செல்லுமானால், இது இலங்கை இலகுவாக தப்பிச் செல்வதற்கு வழங்கப்படும் அதிர்ஷ்ட காலமாகவே அமையும்.

2009 மே மாதம் முள்ளிவாய்க்காலில் மௌனமடைந்த 138 நாள் கொடூர யுத்தத்தை வெளிப்படுத்தும் ஷநோ பயர் சோன்; (No Fire Zone) என்ற புலனாய்வு விவரணத்தை கலேம் மக்ரே வெளியிட்டு இலங்கை அரசின் படுகொலைகளையும் மனித உரிமை மீறல்களையும் அம்பலப்படுத்தினார்.

இது பற்றி 2015இல் விசாரணை நடத்திய நீதிபதி மக்ஸ்வெல் பரணகம தமது தீர்ப்பில், இராணுவம் மேற்கொண்ட போர்க்குற்றங்கள் நம்பகமானவையென தீர்ப்பளித்திருந்தார். இதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

ஜெனிவா அமர்வு இடம்பெறும் தற்போது, அமெரிக்க ஒக்லான்ட் நிறுவனம் முடிவுபெறாத போர் (Endless War) என்ற விவரண அறிக்கையை போதிய ஆதாரங்களுடன் வெளியிட்டுள்ளது. இலங்கையில் சிங்கள அரசு தமிழ் மக்களின் நிலங்களை சிங்கள மயமாக்குவதையும், ஆக்கிரமிப்பதையும் இந்த அறிக்கை அம்பலப்படுத்துகிறது.

தற்போது ஜெனிவாவில் முன்வைக்கப்பட்டுள்ள வரைபுகள் தொடர்பாக ஒக்லான்ட் அறிக்கையைத் தயாரித்த அனுராதா மிட்டால் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்: "தற்போதைய மனித உரிமைகள் ஆணையாளர் பச்சிலற், முன்னாள் ஆணையாளர்கள், ஐ.நா.வின் ஒன்பது முன்னாள் சிறப்புப் பிரதிநிதிகள் மற்றும் ஐ.நா. செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழுவின் அறிக்கையைத் தயாரித்த அனைத்து உறுப்பினர்கள் ஆகியோரின் பரிந்துரைகளிலிருந்து இந்த வரைபு முற்றிலும் விலகி நிற்கிறது." அவரிக் இக்கருத்து, மனித உரிமைப் பேரவை யின் வரைபுகளை தமிழர்களும் அவர் களின் அரசியல் தரப்புகளும் சமூக செயற்பாட்டாளர்களும் முற்றாக நிராகரிக்க வேண்டுமென்பதை எடுத்துச் சொல்கிறது.

இதற்கும் மேலாக பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட வரைபுகள் தொடர்பாக கூட்டுத் தலைமை நாடுகளுக்கும் உறுப்பு நாடுகளுக்கும் எடுத்துக்கூற என்ன இருக்கிறது?

அரசியல் என்பது அறம் சார்ந்தது. அறம் என்றால் தர்மம் என்று பொருள். இதற்குள் 32 வகையறாக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதில் முதலாவது நீதி.

அனைத்துலக அரங்கில் சர்வதேச நாடுகளிடம் ஈழத்தமிழர்கள் நீதி என்ற 'அற'வியலை வேண்டி நிற்கின்றனர். பன்னிரண்டு ஆண்டுகள் இதற்காகக் காத்திருந்தும் அந்த நீதி கிடைக்கவில்லை. அறம் அழிக்கப்படுகிறது. அறம் அநாதையாக்கப்படுகிறது. அறம் காணாமலாக்கப்படுகிறது. காலம் ஒருநாள் இதற்கு பதில் சொல்லியே ஆகவேண்டுமென வலி சுமக்கும் மக்கள் காத்திருக்கின்றனர்.

# புலமைச் சிகரம் 14

## ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

(13 ற்கு உரிய விளக்கம்)

01D . குறித்த உரு தொடர்பாக தரப்பட்ட விவரணத்தை சரியாக விளக்கும் விடையை தெரிவு செய்தல் அல்லது அக் கோலத்திற்கு அடுத்த உருவைக் கண்டறிதல் அல்லது கூடுகளினுள்ளே இடப்பட்டுள்ள கோலத்தித்திற்கேற்ப வெற்றுக் கூட்டிற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்தல்.

**2011 10**

இக் கேள்வி கூடுகளினுள்ளே இடப்பட்டுள்ள கோலத்தித்திற்கேற்ப வெற்றுக் கூட்டிற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்தல் ஆகும்.உருவை கவனியுங்கள்.கறுப்ப சதுரக் குற்றி ஒரு மூலையிலும் அதே போன்ற கறுப்பு சதுரக் குற்றி எதிராக உள்ளது.எனின் மூலையில் உள்ள கறுப்பப் பொட்டிற்கு எதிராக மறு மூலையில் அதே போன்ற கறுப்பு பொட்டு வரவேண்டுமாயின் அதற்குரிய சரியான **விடை 02**

**2011 11**

குறித்த உரு தொடர்பாக தரப்பட்ட விவரணத்தை சரியாக விளக்கும் விடையை தெரிவு செய்தலஆகும். இங்கு கிடையான வரி கொண்ட முக்கோணம். வெள்ளைப் பின்னணியில் கறுப்புப் புள்ளிகளைக் கொண்ட முக்கோணம்.மற்றையது நடுவில் துவாரம் கொண்ட கறுப்பு வளையம்.உரு 01 இல் இரு முக்கோணங்களிலும் வரித்தோற்றம் புள்ளித் தோற்றம் பகுதி பகுதி ஆக்கப்பட்டுள்ளது.எனவே இது தவறு. உரு 02 இல் இரு முக்கோணங்களிலும் வரித்தோற்றம் புள்ளித் தோற்றம்சரியானது.ஆனால் நடுவில் துவாரம் கொண்ட கறுப்பு வளையம் வெள்ளையாக உள்ளது. இது தவறு.

எனவே சரியான **விடை 03**

**2011 14**

கூடுகளினுள்ளே இடப்பட்டுள்ள கோலத்தித்திற்கேற்ப வெற்றுக் கூட்டிற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்தலஆகும். முதலாவது நிரலின் முதல் பெட்டியையும் இரண்டாவது நிரலின் முதல் பெட்டியையும் ஒன்றிணைத்தாலமூன்றாலது நிரலின் முதல் பெட்டி கிடைக்கப்பெறும்.இவ்வாறே முதலாவது நிரலின் இரண்டாவது பெட்டியையும் இரண்டாவது நிரலின் இரண்டாவது பெட்டியையும் ஒன்றிணைத்தால் மூன்றாலது நிரலின் இரண்டாவது பெட்டி கிடைக்கப்பெறும்..இவ்வாறே முதலாவது நிரலின் மூன்றாவது பெட்டியையும் இரண்டாவது நிரலின் மூன்றாவது பெட்டியையும் ஒன்றிணைத்தால் மூன்றாவது நிரலின் வெற்றுப் இடத்தில் கிடைக்கப்பெறுவது. எனவே சரியான **விடை 01**

**2011 15**

முதலாவது நிரலின் முதல் பெட்டியையும் இரண்டாவது நிரலின் முதல் பெட்டியையும் ஒன்றிணைத்தால் மூன்றாவது நிரலின் முதல் பெட்டி கிடைக்கப்பெறும்.இவ்வாறே முதலாவது நிரலின் இரண்டாவது பெட்டியையும் இரண்டாவது நிரலின் இரண்டாவது பெட்டியையும் ஒன்றிணைத்தால் மூன்றாவது நிரலின் இரணடாவது பெட்டி கிடைக்கப்பெறும. .இவ்வாறே முதலாவது வெற்று இடத்தில் இரண்டாவது நிரலின் மூன்றாவது பெட்டியையும் மூன்றாவது நிரலின் மூன்றாவது பெட்டியையும ஒன்றிணைத்தால் வெற்றுப் இடத்தில் கிடைக்கப்பெறுவது எனவே சரியான **விடை 02**

**2011 17**

கூடுகளினுள்ளே இடப்பட்டுள்ள கோலத்தித்திற்கேற்ப வெற்றுக் கூட்டிற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்தல் ஆகும். தரப்பட்ட உருக்கோலத்தைக் கவனியுங்கள். முதலாவது பெட்டியிலுள்ளதைவிடஇரண்டாவது பெட்டியில் ஒரு கறுப்புப் புள்ளி அதிகம்.அவ்வாறே இரண்டாவது பெட்டியிலுள்ளதைவிடமூன்றாவது பெட்டியில் ஒரு கறுப்புப் புள்ளி அதிகம். வெற்றுப்பெட்டியிலும் ஒரு புள்ளி அதிகமாயிருக்க வேண்டும். எனவே சரியான

**விடை 02**

**2012 01**

குறித்த உரு தொடர்பாக தரப்பட்ட விவரணத்தை சரியாக விளக்கும் விடையை தெரிவு செய்தலஆகும். 'முதலாவது பெட்டியிலுள்ள மேசைக்கும் துவிச்சக்கர வண்டிக்கும் தொடர்பில்லை. இரண்டாவது பெட்டியிலுள்ள கதிரைக்கும் துவிச்சக்கர வண்டிக்கும் தொடர்பில்லை. 'மூன்றாவது பெட்டியிலுள்ள மேசைக்கும் கதிரைக்கும் தொடர்புண்டு. தொடர்பில்லை. எனவே சரியான

**விடை 03**

**2012 02**

குறித்த உரு தொடர்பாக தரப்பட்ட விவரணத்தை சரியாக விளக்கும் விடையை தெரிவு செய்தலஆகும் முதலாவது பெட்டியிலுள்ள புசணி ஆனது மரக்கறி அன்னாசி ஆனது பழம். தொடர்பில்லை. மூன்றாவது பெட்டியிலுள்ள புசணி ஆனது மரக்கறி மாம்பழம் ஆனது பழம் தொடர்பில்லை. '.மூன்றாவது பெட்டியிலுள்ள புசணி ஆனது மரக்கறி மாம்பழம் ஆனது பழம் தொடர்பில்லை இரண்டாவது பெட்டியிலுள்ள அன்னாசி ஆனது பழம். மாம்பழம் ஆனது பழம் தொடர்புண்டு. எனவே சரியான **விடை 02**

**ஆசிரியர் அன்னமையா - 076 056 5786**

# உயிர்த்த ஞாயிறுதின தாக்குதல் உண்மையை மறைக்க முயற்சி!

## அரசு மீது மக்கள் சந்தேகம் என்கிறது ஐ.ம.ச.

**கொழும்பு, மார்ச்.14**

**உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பிலான விசார ணைகளில் வெளிப்பட்ட உண்மைகளை மூடி மறைக்க முயற் சித்தாலோ, அல்லது காலங்கடத்த முயற்சித்தாலோ அரசாங் கத்தின் மீதே மக்கள் சந்தேகம் கொள்வார்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும், பாராளுமன்ற உறுப் பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.**




கொழும்பில் அவரது இல்லத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் இவ்வாறு குறிப் பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசார ணைகளை முன்னெடுத்த ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில் உள்ளடக் கப்பட்டுள்ள விடயங்களுக்கமைய சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித் துள்ளார்.

எனினும் மக்கள் எதிர்பார்த்த எது வுமே அறிக்கையில் குறிப்பிடப்பட வில்லை. இந்தத் தாக்குதலுடன் தொடர்பு கொண்ட பிரதான சூத்திரதாரி மற்றும் தற்கொலை தாரிகளுக்கு உதவி ஒத்தா சைகளை வழங்கிய நபர்களின் விவரங் கள் தொடர்பில் கூட ஆணைக்குழு எந்தத் தரவுகளையும் சேகரித்திருக்க வில்லை.

இந்நிலையில் இந்த அறிக்கை தொடர்பில் அரசாங்கம் எவ்வாறான நடவடிக்கையை எடுத்துள்ளது. தாக்குதலில் பாதிக்கப்பட்ட தரப்பின ருக்கு நியாயத்தை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றால், பிரதான சூத்திரதா ரிகள் அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும். இதேவேளை இந்தத் தாக்குதல் தொடர்பில் இடம்பெற்று வரும் நீதிமன்ற விசாரணைகளும் உடனே நிறைவுகான வேண்டும்.

அவ்வாறு எதுவும் இடம்பெறாவிட் டால் அரசாங்கம் வேண்டும் என்றே அதனைப் புறக்கணித்து வருகின்றது என்றே எண்ணத்தோன்றும். இவ்வாறு புறக்கணிப்பதற்கான காரணம் என்ன? இவ்வாறு புறக்கணித்தால் ஏதோ இரகசியம் அதில் காணப்படுவதாகவே சந்தேகம் ஏற்படும் என்றார். (எ)

# பெரமுனவின் எழுச்சியை யாரும் தடுக்க முடியாது!

## சான் பிரதீப் சொல்கிறார்

கொழும்பு, மார்ச்.14

'சேறுபூசும் செயல்பாடுகளால் பொது ஜன பெரமுனவின் எழுச்சியை எவராலும் தடுக்க முடியாது. 2024 ஆம் ஆண்டு ஜனா திபதித் தேர்தலிலும், அடுத்த பொதுத் தேர்தலிலும் சிறிலங்கா பொதுஜன பெர முனவே தனித்து ஆட்சியமைக்கும்' என்று பாராளுமன்ற உறுப்பினர் சான் பிரதீப் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன காரியாலயத் தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ் வாறு குறிப்பிட்டார்.

மக்களின் எதிர்பார்ப்புக்கு அமைய ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ அமோக வெற்றிபெற்றார். ஆட்சிக்கு வந்த காலத்திலிருந்து பாரிய சவால்கள் தோற்றம் பெற்றன.

இதுவரை காலமும் ஆட்சியில் இருந்த ஜனாதிபதிகளைக் காட்டிலும் கோட்டா பய ராஜபக்ஷ மாறுபட்ட அரசியல் கலாசாரத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்.

அரச நிதியை சேமிக்கும் கொள்கை அரச தலைவர்களிடமிருந்து தோற்றம் பெற வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட் டாக தனக்கான பல அரச செலவீனங் களை குறைத்துக்கொண்டுள்ளார்.

கொரோனா வைரஸ் தாக்கத்தை சிறந்த முறையில் கட்டுப்படுத்திய நாடுகள் பட்டியலில் இலங்கை 10ஆவது இடத்தை அடைவதற்கு ஜனாதிபதியின் சிறந்த திட்டங்கள் பிரதான காரணியாக அமைந்தன என்றும் அவர் குறிப்பிட் டார். (எ)

# 7 இலட்சத்து 60, 765 பேருக்கு இதுவரை கொரோனா தடுப்பூசி

கொழும்பு, மார்ச்.14

இலங்கையில் ஒக்ஸ்போர்ட் - அஸ்ட் ராசெனேகா கொவிஷீல்ட் தடுப்பூசி களைப் பெற்றவர்களின் மொத்த எண்ணிக்கை 7 இலட்சத்து 60 ஆயிரத்து 765 ஆக உயர்ந்துள்ளது.

புதிதாக 1,217 பேர் ஒக்ஸ்போர்ட்- அஸ்ட்ராசெனேகா தடுப்பூசியை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பெற்றுக் கொண்டனர் என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித் துள்ளது.

இந்தியாவிலிருந்து 5 இலட்சம் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றதை யடுத்து இலங்கையில் இந்த வருடம் ஜன வரி மாதம் 29 ஆம் திகதி முதல் கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணி ஆரம்பமாகியது குறிப்பிடத்தக்கது. (எ)

# அபாய கட்டத்தில் யாழ்ப்பாணம் இதுவரை 400 பேருக்கு கொரோனா



## சுகாதார வழிமுறைகளை மிக இறுக்கமாக கடைப்பிடிக்க அரச அதிபர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 14

**யாழ்.மாவட்டத்தில் இதுவரை 401 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனவும் தற்போதைய அபாயகரமான நிலையில் பொது மக்கள் தமது அன்றாடச் செயல்பாடுகளை சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி மேற்கொள்வது மிக அவசியம் எனவும் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.**

யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற தற்போதைய கொரோனா தொற்று நிலைமைகள் தொடர்பில் ஆராயும் விஷேட கூட்ட முடிவுகள் குறித்து அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

யாழ். மாவட்ட கொரோனா நிலைமை தொடர்பாக ஆராயும் விஷேட கலந்துரையாடல் இடம்பெற்றது. இதனடிப்படையில் சில முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

இந்த வருடத்தின் கடந்த மூன்று மாதங்களில் யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனா தொற்று உறுதியானவர்களின் எண்ணிக்கை சற்று அதிகரித்துச் செல்கின்றது. அந்த வகையில் தற்பொழுது 401 பேர் கடந்த ஒகஸ்ட் மாதத்திலிருந்து யாழ். மாவட்டத்தில் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

இதில் 204 பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். கொரோனா தொற்றுக்குள்ளானவர்களுடன் தொடர்புடைய ஆயிரத்து 756 பேர் சுயதனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

அந்தவகையில் மிக அவதானமாக பொதுமக்கள் செயல்படவேண்டிய கால கட்டமாக இந்தக் காலப்பகுதி காணப்படுகின்றது. சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாதவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு சுகாதார நடைமுறைகளை பின்பற்றுமாறு வேண்டுகோள் விடுத்தும் பொதுமக்கள் சிலவேளைகளில் அலட்சியமாக செயல்பட்டதன் காரணமாக அதாவது விழாக்கள், ஆலய திருவிழாக்கள், போக்குவரத்து செயல்பாடுகளின் போது சுகாதார நடைமுறையைப் பின்பற்றாததன் காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த வாரங்களில் தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை சற்று அதிகரித்து காணப்படுகின்றது.

இதனடிப்படையில் சுகாதார அமைச்சால் வழங்கப்பட்டுள்ள சில அறிவுறுத்தலுக்கமைய யாழ்ப்பாண மாவட்டத்தில் வழிபாட்டுத் தலங்களில் 50 பேர் மட்டும் கலந்து கொள்ள முடியும். மரண வீடுகளில் 25 பேரும், சமூக கூட்டங்களில் 150 பேர் மாத்திரமே அனுமதிப்பது எனவும் திருமண நிகழ்வில் 150 பேராக மட்டுப்படுத்துவதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மற்றும் ஏனைய களியாட்ட நிகழ்வுகளைத் தடை செய்வதாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் விளையாட்டு நிகழ்வுகள் ஏனைய நிகழ்வுகளுக்கு கட்டுப்பாட்டுடன் அனுமதி வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிகழ்வுகளை நடத்துவதற்கு முன்னர் அப்பகுதி சுகாதார அதிகாரிகளிடம் அனுமதி பெற்று அதனை செயல்படுத்த முடியும். அத்தோடு அவர்களுடைய அறிவுறுத்தலின்படி குறித்த நிகழ்வுகளை நடத்த வேண்டும். அதே போன்று சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக கடைப்பிடிக்குமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கல்விச் செயல்பாடுகள் மற்றும் ஏனைய வாழ்வாதார செயல்பாடுகள் யாழ். மாவட்டத்தில் வழமைபோன்று இடம்பெற்று வருகின்றன.

இந்தச் செயல்பாடுகளை தொடர்ச்சியாக மக்கள் இயல்பாக மேற்கொள்வதற்கு சுகாதார நடைமுறைகளை மிகவும் இறுக்கமாக பின்பற்றி தங்களுடைய குடும்பத்தையும் சமூகத்தையும் பாதுகாப்பதற்கு முன்வரவேண்டும்.

தற்போதைய காலப்பகுதி ஒரு அபாயகரமான காலப்பகுதி. எனவே, பொதுமக்கள் பீதியடையாமல் தமது அன்றாடச் செயல்பாடுகளை சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி மேற்கொள்வதன் மூலம் யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனா தொற்று நிலைமையைக் கட்டுப்படுத்த முடியும் எனத் தெரிவித்தார். (எ)

# பொறுப்புடன் கருத்துரைக்க வேண்டும்: வீரவன்ஸவுக்கு அமுனுகம எச்சரிக்கை

கொழும்பு, மார்ச்.14

இஸ்லாமிய அடிப்படைவாதக் கொள்கையுடையவர்கள் எவரும் அரசாங்கத்தில் இல்லை. எனவே, கைத்தொழில் வளங்கள் அமைச்சர் விமல் வீரவன்ஸ பொறுப்புடன் கருத்துரைக்க வேண்டும். இவ்வாறான ஆதாரமற்ற கருத்துக்கள், குற்றச்சாட்டுக்கள் மக்கள் மத்தியில் தவறான நிலைப்பாட்டை தோற்றுவிக்கும் என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம எச்சரித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

இஸ்லாமிய அடிப்படைவாதக் கொள்கையுடையவர்களை அரசாங்கத்தில் ஒரு போதும் இணைத்துக் கொள்ளமாட்டோம் என்பது பொதுஜன பெரமுனவின் அடிப்படைக் கொள்கையாகக் காணப்பட்டது.



அடிப்படைவாதிகளுடன் ஒன்றிணைந்து ஆட்சியமைக்கக் கூடாது என்பதற்காகவே நாட்டு மக்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்கி தனித்து அரசாங்கத்தை அமைத்துள்ளனர்.

நாட்டில் இஸ்லாமிய அடிப்படைவாதம் தலைதூக்க முடியாத வகையில் தேசிய பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அரசாங்கத்துக்குள் இஸ்லாமிய அடிப்படைவாதக் கொள்கையுடையவர்கள் உள்ளனர் என அமைச்சர் விமல் வீரவன்ஸ குறிப்பிட்டுள்ள கருத்து முற்றிலும் தவறாகும். அடிப்படைவாதக் கொள்கையைக் கொண்டவர்களை உள்ளடக்கி ஆட்சியமைக்கவில்லை.

முரண்பாட்டை தோற்றுவிக்கும் கருத்துக்கள் அரசாங்கம் தொடர்பில் மக்கள் மத்தியில் தவறான நிலைப்பாட்டை தோற்றுவிக்கும்.

ஆகவே அரசாங்கத்தின் உறுப்பினர்கள் அனைவரும் பொறுப்புடன் செயல்படுதல் அவசியமாகும். ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை பாதுகாக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு கிடையாது.

கறுப்பு ஞாயிறுதினப் போராட்டம் தொடர்பில் தற்போது கருத்துரைக்கும் எதிர்த்தரப்பினர் கடந்த கால நிகழ்வுகளை மறந்து விட்டார்கள்.

கடந்த அரசாங்கம் இஸ்லாமிய அடிப்படைவாதத்தை இல்லாதொழிக்க உரிய நடவடிக்கைகளை உரிய காலத்தில் முன்னெடுத்திருந்தால் தற்போது கறுப்பு ஞாயிறு போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய தேவை எற்பட்டிருக்காது.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பிலான அறிக்கையில் ஒரு சிலகுறைபாடுகள் காணப்படுகின்றன. குறைப்பாடுகள் பரிசீலனை செய்யப்படுகின்றன. அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பல யோசனைகள். இனிவரும் காலங்களில் முறையாகச் செயல்படுத்தப்படும்- என்றார். (எ)



# யாழில் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு கூட்டமைப்பு எம்.பிக்கள் இருவர் ஆதரவு

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுவரும் நீதி வேண்டிய உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டு ஆதரவை வழங்கியுள்ளனர்.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டுமென வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுவரும் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டம் நேற்று 14ஆவது நாளாகத் தொடர்ந்தது.

நீதி வேண்டிய இந்தப் போராட்டம் நல்லை ஆதீனம் முன்பு யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் நேற்றுக் காலை இந்தப் போராட்டத்தில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், மற்றும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியார் கலந்துகொண்டு ஆதரவு வழங்கினர்.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதன் ஊடாக, இலங்கை அரசாங்கத்தால் புரியப்பட்டுள்ள போர்க்குற்றங்கள், மனித நேயத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் தமிழினத்துக்கு எதிரான இனவழிப்பு என்பவற்றுக்கு சர்வதேச நீதி வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தமிழினத்தின் மீதான இனவழிப்புத் தொடராது இருப்பதற்கு தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளான மரபுவழித் தாயகம், சுயநிர்ணய உரிமை, தமிழ்த் தேசியம் என்பன அங்கீகரிக்கப்பட வேண்டும் எனவும் இந்தப் போராட்டத்தில் வலியுறுத்தப்படுகிறது. (எ)

# துப்பாக்கிமுனையில் 30 மாணவர் கடத்தல்!

## வடமேற்கு நைஜீரியாவில் பயங்கரவாதிகள் அட்டகாசம்

**லாகோஸ், மார்ச் 14**

**வடமேற்கு நைஜீரியாவில் உள்ள ஒரு பாடசாலையில், பயங்கரவாதிகள் துப்பாக்கி முனையில் குறைந்தது 30 மாணவர்களைக் கடத்திச் சென்றுள்ளனர்.**




தலைநகர் லாகோஸிலிருந்து கிட்டத்தட்ட 400 மைல் தொலைவில் உள்ள கடுனாவின் புறநகரில் உள்ள வனவியல் இயந்திரமயமாக்கல் கல்லூரியில் இருந்து மாணவர்கள் கடத்தப்பட்டனர்.

கடந்த வியாழக்கிழமை இரவு 11.30 மணியளவில் இந்த கும்பல் அட்டகாசம் புரிந்ததாக கடுனா மாநில பாதுகாப்பு ஆணையர் சாமுவேல் அருவான் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அதிகாலையில் இராணுவம் 180 பேரை மீட்டபோதிலும், இருபாலார் உட்பட சுமார் 30 மாணவர்கள் இன்னும் மீட்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு வடக்கு நைஜீரியாவில் உள்ள ஒரு கல்வி நிறுவனத்தில் இருந்து மாணவர்களை கடத்திச் செல்லும் மூன்றாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

முன்னதாக கடந்த 2 வாரங்களுக்கு முன் ஜம்பாரா மாகாணத்தில் உள்ள ஒரு பாடசாலையில் இருந்து 279 மாணவிகள் கடத்தப்பட்டதும், பின்னர் அரசாங்கம் நடத்திய பேச்சுக்கு பிறகு அவர்கள் விடுவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## அஸ்ட்ராசெனேகா தடுப்பூசியை தாராளமாக பயன்படுத்தலாம்

### உலக சுகாதார நிறுவனம் அறிவிப்பு



லண்டன், மார்ச் 14

அஸ்ட்ராசெனேகா நிறுவனத்தின் 'கோவிட்-19' தடுப்பூசியை ஐரோப்பிய நாடுகள் தவிர்த்து வரும் நிலையில் உலக சுகாதார நிறுவனம் அதனைப் பயன்படுத்துவதில் எந்தப் பிரச்னையும் இல்லை என கூறியுள்ளது.

டென்மார்க், நோர்வே, ஐஸ்லாந்து, இத்தாலி, ரோமானியா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் கொரோனா வைரஸ் பரவல் தடுப்புக்குப் போடப்பட்ட அஸ்ட்ராசெனேகா நிறுவனத்தின் 'கோவிட்-19' தடுப்பூசியினால் சிலருக்கு இரத்தம் உறைந்துவிட்டதாக கூறப்படுகிறது.

இதனால், அஸ்ட்ராசெனேகா நிறுவனத்தின் தடுப்பூசியை போட்டுக் கொள்ள பல ஐரோப்பிய நாட்டு மக்கள் தயக்கம் காட்டி வருகின்றனர். இதன் காரணமாக இந்த நாடுகள் 'கோவிட்-19' தடுப்பூசி விநியோகத்தைக் குறைத்து வருகின்றன.

இந்நிலையில் உலக சுகாதாரநிறுவனத்தின் தடுப்பு மருந்து ஆலோசனைக் குழுவினர் இதுகுறித்து ஆய்வு செய்துள்ளனர். அதில் அஸ்ட்ராசெனேகா தடுப்பூசிக்கும், இரத்தம் உறைவதற்கும் தொடர்பு இருப்பதற்கான சாத்தியங்கள் ஏதும் இல்லை. கொரோனா இறப்புகளை ஆராய்ந்ததில் அதிலும் தடுப்பூசி காரணமாக இறப்புகள் ஏதும் நிகழவில்லை என்று தெரிய வந்துள்ளது.

எனவே மற்ற தடுப்பூசிகளைப் போலவே அஸ்ட்ராசெனேகாவை பயன்படுத்துவதில் எந்தப் பிரச்னையும் இல்லை என்று உலக சுகாதார நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் மார்கரெட் ஹரிஸ் திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.



## இரட்டைக் குழந்தைகளின் பிறப்பு வீதம் அதிகரிப்பு!

லண்டன், மார்ச் 14

உலகில் இதற்குமுன் இல்லாத அளவில் இரட்டைக் குழந்தைகளின் பிறப்பு உச்சத்தை எட்டியிருப்பதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தாமதமாக குழந்தை பெற்றுக்கொள்வதும் 'ஐவிஎவ்' போன்ற மருத்துவத் தொழில்நுட்பங்களின் உதவியுடன் குழந்தை பெற்றுக்கொள்வதுமே இதற்கு முக்கிய காரணம் எனக் கூறப்படுகிறது.

இப்போது, ஆண்டுதோறும் 1.6 மில்லியனுக்கும் மேற்பட்ட இரட்டையர்கள் பிறப்பதாக 'ஹியூமன் ரீபுரொடக்ஷன்' எனும் அறிவியல் சஞ்சிகையில் வெளியான ஆய்வுக் கட்டுரை குறிப்பிடுகிறது. அதாவது, 42 குழந்தைகளில் ஒன்று இரட்டையர்களில் ஒருவராகப் பிறக்கிறது.

1980 களின் நிலைமையை விடவும், இப்போது இரட்டையர் பிறப்பு மூன்றில் ஒரு பங்கு அதிகரித்திருக்கிறது.

2010 முதல் 2015ஆம் ஆண்டு வரை 165 நாடுகளில் பதிவான இரட்டையர் பிறப்பு விகிதத்தைச் சேகரித்து, அதை 1980-1985 காலகட்டத்துடன் ஆய்வாளர்கள் ஒப்புநோக்கினர்.

அதன்படி, முன்பு ஆயிரத்திற்கு ஒன்பது பிரசவங்களில் இரட்டைக் குழந்தைகள் பிறந்த நிலையில், இப்போது அந்த எண்ணிக்கை 12ஆக அதிகரித்திருக்கிறது.

இப்போதைக்கு, உலகில் பிறக்கும் இரட்டையர்களில் கிட்டத்தட்ட 80 வீதமானவர்கள் ஆசிய, ஆபிரிக்க கண்டங்களைச் சேர்ந்தவர்கள் என அந்த ஆய்வு குறிப்பிடுகிறது.

## இத்தாலியின் பெரும் பகுதி மீண்டும் முடக்கப்படுகிறது!

### பள்ளிகள், உணவகங்கள் பூட்டு



ரோம், மார்ச் 14

புதிய தொற்று அலை காரணமாக இத்தாலி நாட்டின் பெரும் பகுதிகள் நாளை திங்கட்கிழமை முதல் மீண்டும் முடக்கப்படுகின்றன.

ஓராண்டு காலத்துக்குப்பிறகு நாடு மீண்டும் ஒரு பெரும் தொற்று அலையைச் சந்திப்பதாக பிரதமர் மரியோ ட்ராகி தெரிவித்திருக்கிறார். அதனை எதிர்கொள்வதற்கான புதிய கட்டுப்பாடுகளை அவர் வெளியிட்டிருக்கிறார்.

கடந்த ஆண்டு பெப்ரவரி-மார்ச்சில் வைரஸ் முதல் அலையாகத் தொற்றத் தொடங்கிய போது முதலில் முடக்கப்பட்ட ஐரோப்பிய நாடு இத்தாலி ஆகும். ஐரோப்பாவில் அதிகூடிய எண்ணிக்கையாக இதுவரை ஒரு லட்சம் பேர் அங்கு உயிரிழந்துள்ளனர்.

பிரதமர் இன்று அறிவித்துள்ள கட்டுப்பாடுகளின் படி வாராந்தம் 250 தொற்றுக்கள் ஏற்படும் பகுதிகள் சிவப்பு வலயங்கள் என்ற பிரிவினுள் அடக்கப்பட்டு அங்கு பொது முடக்கக் கட்டுப்பாடுகள் கண்டிப்பான முறையில் கடைப்பிடிக்கப்படவேண்டும்.

மார்ச் 15 முதல் ஏப்ரல் 6வரை இந்தக் கட்டுப்பாடுகள் அமுலில் இருக்கும். சிவப்பு வலயங்களில் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், உணவகங்கள், அருந்தகங்கள் போன்றன மூடப்பட வேண்டும்.

இதற்கு மேலதிகமாக ஈஸ்டர் விடுமுறையை முன்னிட்டு வரும் ஏப்ரல் 3,4,5 ஆகிய தினங்கள் நாடு முழுவதும் சிவப்பு வலயமாக்கப்பட்டு முடக்கப்படவுள்ளது.

## 'சுத்த சைவ கோழிக்கறி' சிங்கப்பூரில் விற்பனைக்கு

சிங்கப்பூர் சிற்றி, மார்ச் 14

தாவர அடிப்படையிலான சைவ கோழிக்கறி உணவுகள் சிங்கப்பூரின் 11 உணவு நிறுவனங்களில் எதிர்வரும் 18ஆம் திகதி முதல் விற்பனைக்கு வரவுள்ளன.

'நெக்ஸ்ட் ஜென் பூட்ஸ்' நிறுவனம் 'டிண்டல்' எனப் பெயரிடப்பட்டுள்ள சைவ கோழிக்கறியை விற்பனைக்குக் கொண்டு வருகிறது.

அந்த நிறுவனம் தயாரித்த 'டிண்டல் தை' எனும் சைவ கோழிக்கறி தண்ணீர், சோயா, தேங்காய்க் கொழுப்பு, சூரியகாந்தி எண்ணெய் உட்பட 9 பொருள்கள் சேர்த்துத் தயாரிக்கப்படுகிறது.

'லிபி' எனப்படும் அந்த நிறுவனத்தின் சொந்தத் தயாரிப்பான தாவர அடிப்படையிலான கொழுப்புகள் மற்றும் வாசனைப் பொருளும் அதில் சேர்க்கப்பட்டுள்ளன.

சுகாதார மேம்பாட்டு வாரியத்தால் 'ஆரோக்கியமான தெரிவு' எனக் குறிப்பிடப்பட்டுள்ள இந்த கோழிக்கறியில் 'அன்டிபயோட்டிக்', 'ஹோர்மோன்' போன்றவை இல்லை. இதில் பூரித கொழுப்பின் அளவும் சோடியத்தின் அளவும் குறைவு.





# சொந்த மண்ணில் இந்திய அணிக்கு அவமான தோல்வி

## இங்கிலாந்து அபார வெற்றி

அஹமதாபாத், மார்ச் 14

இந்திய அணிக்கெதிரான முதலாவது ரி-20 போட்டியில், இங்கிலாந்து கிரிக்கெட் அணி 8 விக்கெட்டுகளால் அபார வெற்றி பெற்றுள்ளது. இந்த வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில், 1-0 என்ற கணக்கில் இங்கிலாந்து முன்னிலை பெற்றுள்ளது.

அஹமதாபாத் மைதானத்தில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 124 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, ஸ்ரேயஸ் ஐயர் 67 ஓட்டங்களையும் ரிஷப் பந்த் 21 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இங்கிலாந்து அணியின் பந்துவீச்சில், ஜொப்ரா ஆர்செர் 3 விக்கெட்டுகளையும் அடில் ராஷித், மார்க் வுட், கிறிஸ் ஜோர்தான் மற்றும் பென் ஸ்டோக்ஸ் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 125 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இங்கிலாந்து அணி, 15.3 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் அந்த அணி 8 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, ஜேஸன் ரோய் 49 ஓட்டங்களையும் ஜோஸ் பட்லர் 28 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். இந்திய அணியின் பந்துவீச்சில், யுஸ்வேந்திர சஹால் மற்றும் வொஷிங்டன் சுந்தர் ஆகியோர் தலா 1 விக் கெட்டை வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, நான்கு ஓவர்கள் வீசி ஒரு மெய்டன் அடங்கலாக 23 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டுகளை சாய்த்த ஜொப்ரா ஆர்செர் தெரிவுசெய்யப்பட்டார்.

இரு அணிகளுக்கிடையிலான இரண்டாவது ரி-20 போட்டி, இன்று ஞாயிற்றுக்கிழமை அஹமதாபாத் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## ஜாம்பவான்கள் கிரிக்கெட் தொடர்:

# பங்களாதேஷ் அணியை வீழ்த்திய மேற்கிந்தியதீவு ஜாம்பவான்கள்



ராய்பூர், மார்ச் 14

வீதி பாதுகாப்பு உலக கிரிக்கெட் தொடரின், 12 ஆவது லீக் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் ஜாம்பவான்கள் அணி 5 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

ராய்பூர் மைதானத்தில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், மேற்கிந்திய தீவுகள் ஜாம்பவான்கள் அணியும் பங்களாதேஷ் ஜாம்பவான்கள் அணியும் மோதின.

இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்திய தீவுகள் ஜாம்பவான்கள் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய பங்களாதேஷ் ஜாம்பவான்கள் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 169 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, மெராப் ஹொசைன் 44 ஓட்டங்களையும் நசிமுதீன் 33 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

மேற்கிந்திய தீவுகள் ஜாம்பவான்கள் அணியின் பந்துவீச்சில், சுலைமான் பென் 3 விக்கெட்டுகளையும் ஆஸ்டின் 2 விக்கெட்டுகளையும் பெஸ்ட் 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 170 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் ஜாம்பவான்கள் அணி, 18.5 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது.

இதனால் மேற்கிந்திய தீவுகள் ஜாம்பவான்கள் அணி 5 விக்கெட்டுகளால் அபார வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, கிர்க் எட்வட்ஸ் 46 ஓட்டங்களையும் ரிட்லீ ஜெகொப்ஸ் 34 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பங்களாதேஷ் ஜாம்பவான்கள் அணியின் பந்துவீச்சில், அப்துல் ரஸாக் 2 விக்கெட்டுகளையும் முஷ்பிகுர் ரஹ்மான் மற்றும் மொஹமட் ரபீக் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, 3 விக்கெட்டுகளை வீழ்த்திய மேற்கிந்திய தீவுகள் வீரர் சுலைமான் பென் தெரிவுசெய்யப்பட்டார்.

# மன்னிப்பு கேட்ட பொல்லார்ட்!





ஆண்டிகுவா, மார்ச் 14

ஆண்டிகுவாவில் நடந்த முதல் ஒருநாள் போட்டியின்போது கிரோன் பொல்லார்ட், தன்னிடம் ஆடுகளத்தில் ஏற்பட்ட சர்சைக்குரிய தடங்கல் குறித்து முறையிட்டமைக்காக மன்னிப்பு கோரியதாக தனுஷ்க குணதிலக தெரிவித்துள்ளார்.

போட்டியின் 22 ஆவது ஓவரில் குணதிலக, பொல்லார்ட்டின் ஒரு பந்து வீச்சை எதிர்கொண்டு அதனை தனது கால்களுக்கு முன்னால் தடுத்து நிறுத்தினார்.

மறுபக்கத்தில் இருந்த பதும் நிசாங்க அதற்கு ஒரு ஓட்டத்தை ஓட முயன்ற சந்திர்ப்பத்தில் தனுஷ்க குணதிலகவினால் மீண்டும் திருப்பி அனுப்பட்டார்.

அதையடுத்து குணதிலக, கிறிஸ் கோட்டுக்கு பின்னோக்கி திரும்ப முயற்சிக்கையில் எதிர்பாராத விதமாக அந்த பந்து அவரின் கால்களில் சிக்கி பின்நோக்கி நகர்ந்தது.

இதனிடையே ரன்-அவுட்டை மேற்கொள்ள பந்தைப் பிடிக்கும் முயற்சியினை மேற்கொண்ட பொல்லார்ட்டுக்கு குணதிலகவின் இந்த நடவடிக்கை இடையூறாக அமைந்தமையினால் நடுவரிடம் முறையிட்டார்.

ஆன்-பீல்ட் நடுவர் அதை மூன்றாவது நடுவருக்கு மாற்றினார். மூன்றாவது நடுவரின் தீர்ப்பில் குணதிலக்க களத்தடுப்பு தடையை ஏற்படுத்தியமை கண்டறியப்பட்டு, அவர் ஆட்டமிழந்ததாக அறிவித்தார்.

இந்த சம்பவம் முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் மற்றும் ரசிகர்கள் மத்தியில் சமூக ஊடகங்களில் ஒரு விவாதத்தைத் தூண்டியது.

இந் நிலையில் இது குறித்து விபரிக்க மேற்கிந்திய தீவுகள் வெற்றி பெற்ற பிறகு பொல்லார்ட் தன்னிடம் வந்ததாக குணதிலக கூறியுள்ளார்.

இவ்வாறு வந்த பொல்லார்ட் தன்னிடம் மன்னிப்பு கேட்டதாகவும், ஆடுகளத்தில் அந்த சம்பவம் அரங்கேறிய நேரத்தில் தான் அதை சரியாகப் பார்க்கவில்லை என்றும் பொல்லார்ட் தன்னிடம் கூறியதாகவும் குணதிலக குறிப்பிட்டார்.

அத்துடன் அந்த வீடியோவைப் பார்த்த பிறகுதான் நான் ஒன்றும் செய்யவில்லை என்பதை உணர்ந்தேன் என்றும் குணதிலக சுட்டிக்காட்டினார்.

(அ)

# தொடரை வென்றது மேற்கிந்திய தீவுகள்!



ஆண்டிகுவா, மார்ச் 14

இலங்கை அணிக்கெதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில், மேற்கிந்திய தீவுகள் அணி, 5 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 2-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்று தொடரை வென்றுள்ளது.

ஆண்டிகுவா மைதானத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 273 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, தனுஷ்க குணதிலக்க 96 ஓட்டங்களையும் சந்திமால் 71 ஓட்டங்களையும் வனிந்து ஹசரங்க 47 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்துவீச்சில், ஜேஸன் மொஹமட் 3 விக்கெட்டுகளையும் அல்சார்ரி ஜோசப் 2 விக்கெட்டுகளையும் ஹோல்டர் மற்றும் அகீல் ஹொசைன் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 274 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி, 49.4 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் அந்த அணி 5 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, எவின் லீவிஸ் 103 ஓட்டங்களையும் ஷாய் ஹோப் 84 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இலங்கை அணியின் பந்துவீச்சில், நுவான் பிரதீப் மற்றும் திசர பெரேரா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் லக்ஷான் சந்தகென் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, 121 பந்துகளில் 4 சிக்ஸர்கள் 8 பவுண்டரிகள் அடங்கலாக 103 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட எவின் லீவிஸ் தெரிவு செய்யப்பட்டார்.

இரு அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டி, இன்று ஞாயிற்றுக்கிழமை ஆண்டிகுவா மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# தீவிரவாத குற்றச்சாட்டில் கைதாவோருக்கு புனர்வாழ்வு



## ஜனாதிபதி கையொப்பத்துடன் விஷேட வர்த்தமானி வெளியீடு

கொழும்பு,மார்ச்14

**தீவிரவாதக் குற்றச்சாட்டுக்களின் பேரில் கைதாவோரை புனர்வாழ்வுக்குட்படுத்தும் சரத்துக்கள் உள்ளடங்கிய விஷேட வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கையொப்பத்துடன் வெளியாகியது.**

இந்த விஷேட வர்த்தமானியில் அடிப்படைவாதம் மற்றும் தீவிரவாதப் போக்குடைய மதச் செயல்பாடுகளுடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்படுவோரும் இந்தச் சட்டத்துக்குள் உள்ளடக்கப்படுவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தீவிரவாத நடவடிக்கைகளுடன் தொடர்பிலிருந்த குற்றச்சாட்டுக்களுக்காக கைது செய்யப்படுவோரை புனர்வாழ்வளிப்பதற்கான புதிய விதிமுறைகளுடன் கூடிய வர்த்தமானி அறிவித்தலே நேற்று வெளியாகியது. (எ)

## குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் அஸாத் சாலிக்கு எதிராக முறைப்பாடு

கொழும்பு, மார்ச் 14

தேசிய ஒற்றுமை முன்னணியின் தலைவரும், முன்னாள் ஆளுநருமான அஸாத் சாலிக்கு எதிராக நேற்றுக் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டன.

பௌத்த தகவல் மையத்தின் பணிப்பாளர் அங்குலுகல்லே சிறி ஜினானந்த தேரர் மற்றும் தேசிய முன்னணியின் ஊடகப் பேச்சாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான மொஹமட் முஸம்மில் ஆகியோரே இவ்வாறு தங்கள் முறைப்பாடுகளைப் பதிவு செய்தனர்.

முஸ்லிம் சட்டம் தொடர்பில் அண்மையில் அஸாத் சாலி தெரிவித்த கருத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கக் கோரியே இவ்வாறு முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. (எ)

## சூத்திரதாரிகளை வெளிக்கொணர புதிய திட்டம் வகுக்க வேண்டும்

### சஜித் பிரேமதாஸ வலியுறுத்து



கொழும்பு, மார்ச்.14

ஈஸ்டர் தாக்குதலின் உண்மையான சூத்திரதாரிகளை வெளிக்கொணர அரசியல் பேதங்களைக் கடந்து புதிய திட்டத்தை வகுக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

செப்ரெம்பர் 11 தாக்குதலுக்குப் பின்னணியிலிருந்த சூத்திரதாரிகளை அடையாளம் கண்டு தண்டிக்க அமெரிக்க அரசு எடுத்த நடவடிக்கைகளை இலங்கை ஒரு உதாரணமாக கொள்ளவேண்டும்.

மேலும், இரட்டைக் கோபுரத் தாக்குதல் தொடர்பில் சுயாதீன ஆணைக்குழு நியமித்து, அதன் பரிந்துரைகளை அமுல்படுத்தியதன் மூலம் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

இந்நிலையில், ஈஸ்டர் தாக்குதல்களின் முக்கிய சூத்திரதாரி, ஓடித் தப்பிப்பதற்கு முன், உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம்- என்றார். (எ)

## ஹலீமுக்கு கொரோனா

கொழும்பு, மார்ச் 14

முன்னாள் அமைச்சரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எச்.எம். ஹலீமுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

தனக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என அவரே குறிப்பிட்டுள்ளார். (எ)

## பங்களாதேஷ் செல்கிறார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ

கொழும்பு, மார்ச் 14

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 19ஆம் திகதி பங்களாதேஷுக்கு விஜயம் செய்யவுள்ளார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

பங்களாதேஷ் நாட்டின் அழைப்பை ஏற்று அங்கு செல்கின்ற பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இரண்டு நாட்கள் அங்கு தங்கியிருப்பார் எனவும் கூறப்படுகின்றது.

இந்த விஜயத்தின்போது அவர் பங்களாதேஷ் நாட்டின் அரச பிரமுகர்களை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவிக்கு வந்த பின்னர் மேற்கொள்ளும் இரண்டாவது வெளிநாட்டு உத்தியோகபூர்வ விஜயம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

## வாகனங்களை இறக்குமதி செய்ய விஷேட வேலைத்திட்டம் தயாரிப்பு

கொழும்பு, மார்ச் 14

வாகனங்களை இறக்குமதி செய்ய விஷேட வேலைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படவுள்ளது என திறைசேரியின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

இறக்குமதி செய்யப்படும் வாகனங்களில் தனிப்பட்ட பாவனைக்காக பயன்படுத்தப்படும் வாகனங்களின் இறக்குமதி இடைநிறுத்தப்பட்டுள்ளது. நாட்டின் டொலரின் பெறுமானத்தை சேமிப்பதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக வாகன இறக்குமதியாளர்களுடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (எ)

## தனிமைப்படுத்தல் காலம் குறைக்கப்படலாம்

கொழும்பு,மார்ச்14

வெளிநாட்டிலிருந்து திரும்பும் இலங்கையர்களின் தனிமைப்படுத்தல் காலத்தை 7 நாள்களாக குறைக்கக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கையை இராணுவ தளபதி சவேந்திர சில்வா, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் விடுத்துள்ளார்.

அத்தோடு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்ட அவர்களை வீட்டிலேயே தனிமைப்படுத்த அனுமதிக்குமாறும் அவர் கோரியுள்ளார்.



அந்தவகையில் இந்த இரண்டு கோரிக்கைகளுக்கும் சாதகமான பதில் எதிர்வரும் நாள்களில் கிடைக்கும் என தான் நம்புவதாக இராணுவ தளபதி தெரிவித்தார்.

ஹோட்டல்களில் தனிமைப்படுத்தும் போது வெளிநாட்டில் இருந்துவரும் இலங்கையர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளைக் கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

## மியன்மாரின் இராணுவ சூழ்ச்சிக்கு எதிராக இலங்கை அழுத்தம் கொடுக்க வேண்டும்

### ஐ.தே.க. மீண்டும் வலியுறுத்தல்

கொழும்பு, மார்ச்.14

மியன்மாரில் ஜனநாயக ஆட்சி ஸ்தாபிக்கப்படுவதற்கான தேவை குறித்து இலங்கை அரசாங்கத்தால், பிம்ஸ்டெக் மாநாட்டில் பங்குபற்றவுள்ள மியன்மார் பிரதிநிதிகள் குழுவிடம் எடுத்துரைக்கப்பட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

அத்தோடு இராணுவத்துக்கும், ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் அதிகரித்து வரும் வன்முறையானது, பௌத்தத்தை பின்பற்றும் தேசத்தை பிரதிபலிப்பதாகாது என்றும், மியன்மாரில் இராணுவ வன்முறைகளால் ஜனநாயகம் முடக்கப்படுவதை வன்மையாகக் கண்டிப்பதாகவும் ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் ஐ.தே.க. நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையில்:

ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத்தை மீண்டும் ஆட்சியில் அமர்த்த வேண்டியதன் தேவை குறித்து, பிம்ஸ்டெக் மாநாட்டில் பங்குபற்றவுள்ள மியன்மார் பிரதிநிதிகள் குழுவிடம் எடுத்துரைக்குமாறு இலங்கை அரசாங்கத்திடம் ஐக்கிய தேசிய கட்சி கோரிக்கை விடுக்கிறது.

இலங்கைக்கும் மியன்மாருக்கும் இடையிலான உறவு 4 நூற்றாண்டுகளாகத் தொடர்வதாகும். இந்த நீண்ட கால உறவைப் பயன்படுத்தி, மியன்மாரில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் வன்முறைகளை உடனடியாக நிறுத்துவதற்கும், சட்டபூர்வமாக தெரிவாகியுள்ளவர்கள் பதவிகளில் அமர்த்தப்படுவதற்கும் அரசாங்கம் தொடர்ச்சியான அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும்.- என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

## இலங்கையில் புர்காவுக்குத் தடை!

### உத்தரவில் சரத் வீரசேகர கையொப்பம்

### திங்கள் அமைச்சரவையில் சமர்ப்பிப்பு



கொழும்பு, மார்ச் 14

இலங்கையில் புர்காவை தடை செய்வதற்கான உத்தரவில் கையெழுத்திட்டுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

புர்காவை தடை செய்வது தொடர்பான யோசனையொன்று எதிர்வரும் திங்கட்கிழமை இடம்பெறும் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த ஜனாதிபதி ஆணைக்குழு, புர்காவை தடை செய்யுமாறு பரிந்துரைகளை முன்வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்ற நிலையிலேயே புர்காவை தடை செய்வதற்கான உத்தரவில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் கையெழுத்திட்டுள்ளார். (எ)

## இதுவும் நடந்தது!

சில மாதங்களுக்கு முன்னர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் தமிழ் ஊடகவியலாளர்களைச் சந்தித்போது ஒரு தகவலைத் தெரிவித்திருந்தார்.

தனது சொந்த ஊரான அம்பாந்தோட்டையைச் சேர்ந்த ஒருவர் ஜே.வி.பியுடனான மோதல்களின்போது காணாமல் போயிருந்தாராம். நீண்ட காலத்தின் பின்னர் அவரது நினைவு வைபவம் ஒன்றுக்கு தான் போய்வந்த சில வாரங்களின் பின்னர், அவர் வெளிநாடொன்றிலிருந்து தன்னுடன் தொடர்பு கொண்டு பேசினாராம். காணாமல் போனவர்கள் சிலர் வெளிநாடுகளில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை நாசூக்க அவர் இவ்வாறு சொல்லியிருந்தார்.

ஊர்க்குருவியின் நேற்றைய கருத்தைப் படித்துவிட்டு நண்பர் ஒருவர் தகவல் குறிப்பு ஒன்றை எழுதி அனுப்பியிருந்தார். முன்னாள் போராளியான அவர், சுரேஷின் நெருங்கிய நண்பர். அவர் இறுதி யுத்தத்தின்போது அங்கிருந்த பல போராளிகளுக்கும் நண்பர்.

சுரேஷ் பிரேமச்சந்திரன் ஒன்றும் தனது கணக்கெடுப்பை வெளியிடவில்லை. யுத்தம் முடிவடைந்ததும் அப்போது மன்னார் ஆயராக இருந்த இராயப்பு யோசப் ஆண்டகை வெளியிட்ட தகவல் ஒன்றைத்தான் அவர் குறிப்பிட்டிருக்கவேண்டும் என்ற அவரது குறிப்பு சரியானதுதான்.

According to records of the SL Government Agent offices of Mullaiththeevu and Kilinochchi districts, the population of Vanni was 429,059 in October 2008. The total number of people who got into SL government control after the war was 282,380, according to UN update as of 10 July 2009. “Due clarification should be made regarding what happened to 146,679 people, which is the discrepancy between the number of people who came to government controlled areas between October 2008 – May 2009 and the population reported to be in Vanni in early October 2008,” said the Catholic Bishop of Mannaar, Rt. Rev. Dr. Rayappu Joseph in his submission to the LLRC.

ஒக்ரோபர் 2008இல் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் 429,059 பேர் வாழ்ந்ததாக இரண்டு மாவட்ட அரச அதிபர்கள் தெரிவித்திருக்கின்றனர். ஒக்ரோபர் 2008 முதல் மே 2009 வரை 282,380 பேர் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வந்ததாக ஐ.நா அறிக்கையிட்டிருக்கின்றது. அப்படியெனில் 146, 679 பேருக்கும் என்ன நடந்தது என்பதை கண்டறியவேண்டும் என்று ஆண்டகை ராயப்பு, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் தான் சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவித் திருந்தார்.

ஜனவரி 2011ல் ஆண்டகை ராயப்பு யோசப் கேள்வி எழுப்பியது நியாயமானதுதான்.

இந்த 146,679 என்ற தகவலைத்தான் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஐநாவில் கடந்த வாரம் தெரிவித்திருந்தார் என்கிறார் அந்த நண்பர்.

ஆனால் இந்தப் பந்தியில் ஊர்க்குருவி எழுப்பிய கேள்வி, அந்த 146, 679 பேருடைய விவரங்களும் இப்போது 2021ல் சுரேஷிடம் இருக்கிறதா என்பதுதான். ஆயர் சுட்டிக்காட் டிய அந்த 429, 059 பேரின் விவரங்களும் குறித்த இரண்டு அரச அதிபர்களிடமும் உண்டு. அதேபோல 282,380 அகதிகளினது விவரமும் ஐநாவிடமுண்டு.

இப்போது இரண்டிலும் இல்லாதவர்கள் விபரங்களை சுரேஷ் பிரேமச்சந்திரன் கண்டு பிடித்திருப்பார் என்ற நம்பிக்கையில்தான் ஊர்க்குருவி அவரிடம் விவரங்களை கேட்டிருந்தது.

அப்படியொரு விபரம் சுரேஷிடம் இப்போதும் இல்லையென்றால் ராஜபக்ஷ தெரிவிக்கும் காணாமல்போனவரின் கதையைத்தான் சர்வதேசம் நம்பவேண்டியிருக்கும்.

**- ஊர்க்குருவி.**

# ஈஸ்டர் தாக்குதல் பின்னணி அபத்தமான குற்றச்சாட்டு!

### ஜனாதிபதி கோட்டாபய நிராகரிப்பு



காலி, மார்ச்.14

**ஈஸ்டர் தாக்குதல் பின்னணியில் பஸில் ராஜபக்ஷவும், தானும் உள்ளதாக எதிர்க்கட்சியினர் அபத்தமான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

கிராமத்துடன் உரையாடல் நிகழ்ச்சித் தொடரின் 14 ஆவது நிகழ்ச்சி நேற்று காலி மாவட்டத்திலுள்ள ஹிக்கடுவ பிரதேச செயலகப் பிரிவில் இடம்பெற்றபோது அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

ஈஸ்டர் தாக்குதல் பின்னணியில் பஸில் ராஜபக்ஷவும், நானும், நிஸங்க சேனாதிபதியும் இருப்பதாக எதிர்க் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் குற்றம்சாட்டியுள்ளார்.

இதுதொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு அந்தப் பாராளுமன்ற உறுப்பினரை அழைத்து அறிந்த விடயங்களை பெற்றுக் கொள்ளுமாறு தான் தெரிவித்தாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

எனினும் தகவல்களை கேட்க சென்றபோது, எனக்குத் தெரியாது. நான் மறந்துவிட்டேன். இதுபோன்ற தகவல்கள் தனக்குத் தெரியாது என்று அவர் கூறுவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சியினர் எப்போதும் இத்தகைய அபத்தமான குற்றச்சாட்டுக்களையே முன்வைத்து வருகின்றனர் என்றும் ஜனாதிபதி குற்றம்சாட்டினார்.

அண்மையில் குருநாகல் பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றின்போது உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க, ஈஸ்டர் தாக்குதலுடன் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ உள்ளிட்டோருக்கு தொடர்புள்ளது எனத் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# நீர்ப்பாசன செழிப்பு திட்டம் மடுவில் நேற்று ஆரம்பம்



மன்னார், மார்ச்.14

நீர்ப்பாசனச் செழிப்பு என்ற கிராமிய குளங்கள் புனரமைப்புத் திட்டம் மன்னார், மடு பிரதேச செயலாளர் பிரிவில் நேற்று ஆரம்பமானது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சௌபாக்கிய கொள்கையின் கீழ், நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப் படும் இந்தத் திட்டத்தில் 5000 கிராமிய விவசாயக் குளங்கள் மற்றும் அணைக்கட்டுகள் அபிவிருத்தி செய்யப்படுகின்றன.

இதன்படி, மன்னார் மாவட்டத்தில் சுமார் 138 குளங்களை மறுசீரமைப்புச் செய்வதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய மடு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஊமையார் துவரம் குளம் புனரமைப்புக்கான அங்குரார்ப்பண நிகழ்வு நேற்றுக் காலை இடம்பெற்றது.

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இதில், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ஏ.ஸ்ரான்லி டிமேல், மடுப் பிரதேச செயலாளர், மத்திய நீர்ப்பாசனப் பணிப்பாளர், விவசாய உதவிப் பணிப்பாளர், நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள், கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்தத் திட்டத்துக்காக சுமார் 8.6 மில்லியன் ரூபா நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், இந்த வேலைத் திட்டத்தின் பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்து வேலைத் திட்டத்தை காதர் மஸ்தான் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். (எ)

# ஆளும் தரப்பில் அங்கம் வகிக்கும் அடிப்படைவாத ஆதரவாளர் யார்?

### வீரவன்ஸவிடம் விசாரணை கோரி எதிர்க்கட்சியினர் முறைப்பாடு

கொழும்பு, மார்ச்.14

அடிப்படைவாதிகளுக்கு ஆதரவாகச் செயல்படும் ஆளும் தரப்பினர்கள் தொடர்பில் விவரங்களை அறிந்து கொள்ள அமைச்சர் விமல் வீரவன்ஸவிடம் விசாரணைகளை ஆரம்பிக்குமாறு கோரி எதிர்க்கட்சியினர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

குற்றப்புலனாய்வுப் பிரிவில் நேற்று முன்தினம் இதுதொடர்பான முறைப்பாட்டை ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜெயவர்த்தன அளித்திருந்ததுடன், இவருடன் சட்டத்தரணிகளான ஏரந்த வெலியங்க மற்றும் தாரக்க நாணயக்கார ஆகியோரும் சென்றிருந்தனர்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த காவிந்த ஜெயவர்த்தன தெரிவிக்கையில்:

“தற்போதைய அரசாங்கத்தில் அடிப்படைவாதிகளுடன் இணைந்து செயல்படுவதற்கு எதிர்பார்த்துள்ள சிலர் இருப்பதாகவும், அவர்களின் தலையீடு காரணமாகவே உயிர்த்த ஞாயிறுதின தற்கொலைத் தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாமல் இருப்பதாக அமைச்சர் விமல் வீரவன்ஸ பகிரங்கமாக தெரிவித்திருந்ததுடன், அந்தக் கருத்து பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளது. அதனால், அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு முறைப்பாடு செய்துள்ளோம்.

உயிர்த்த ஞாயிறுதின தற்கொலை தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயத்தை வழங்குவதாகவும், அதனுடன் தொடர்புடைய சந்தேக நபர்களுக்கு தண்டனை பெற்றுக் கொடுப்பதாகவும் வாக்குறுதி வழங்கியே இந்த அரசாங்கம் ஆட்சியைக் கைப்பற்றியது. ஆனால், இன்று அந்த வாக்குறுதியை புறக்கணித்துச் செயல்படுவதாகத் தோன்றுகின்றது. இதனால் கத்தோலிக்க மக்களே பாதிக்கப்பட்டுள்ளனர்- என்றார். (எ)


கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**

12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள் (நேரலை)

ஈழநாடு
Eelanadu

# இலங்கையில் இனப்படுகொலை: சர்வதேச விசாரணை வேண்டும்

## தி.மு.க. தேர்தல் அறிக்கை வெளியீடு

சென்னை,மார்ச்.14

**இலங்கையில் இடம்பெற்ற இனப் படுகொலை, மற்றும் போர்க்குற்றங் கள் குறித்து சர்வதேச விசாரணையை முன்னெடுப்பதற்கும், தமிழர்களுக்கு நிரந்தரத் தீர்வு வழங்கும்பொருட்டு பொது வாக்கெடுப்பு நடத்துவதற்கும் மத்திய அரசை வலியுறுத்தவுள்ளதாக தி.மு.கவின் தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் எதிர் வரும் ஏப்ரல் ஆறாம் திகதி நடைபெற வுள்ள நிலையில் பிரதான எதிர்க்கட்சி யான தி.மு.க. தேர்தல் அறிக்கையை நேற்று வெளியிட்டது.

இந்தத் தேர்தல் அறிக்கையில் ஈழத் தமிழர் நல்வாழ்வு என்ற தலைப்பின் கீழ் நான்கு விடயங்களைச் செயல்படுத்துவது தொடர்பில் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

அதில், இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங் கள், இனப்படுகொலை குறித்து சர்வதேச விசாரணையை மேற்கொள்ள இந்திய அரசு உலக நாடுகளை வலியுறுத்திச் செயல்படுத்த வேண்டுமென மத்திய அரசை தி.மு.க. வலியுறுத்தும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கையின் வடக்கு - கிழக்கில் நீர்த்துப் போன அதிகாரப் பங் கீடுகளே அனுமதிக்கப்பட்டுள்ளன. எனவே, இங்குள்ள தமிழர்களின் விருப் பத்துக்கு ஏற்றவாறு நிரந்தர அரசியல் தீர்வு அமைய ஈழத் தமிழர்கள், புலம் பெயர் தமிழர்கள் இடையே ஐ.நாவின் மேற்பார் வையில் பொது வாக்கெடுப்பு நடத்தவும் மத்திய அரசை தி.மு.க. வலியுறுத்தும் என உறுதியளிக்கப்பட்டுள்ளது.

மேலும், இலங்கையில் புதிதாக உரு வாக்கப்படவுள்ள அரசமைப்புச் சட்டத்தில் முழுமையான அதி காரங்கள் தமிழர்களுக்குக் கிடைக் கும் வகையில் சட்டப் பிரிவுகளை உருவாக்குவதற்கு இலங்கையை நிர்ப்பந்திக்க வேண்டும் என்று மத் திய அரசை தி.மு.க. வலி யுறுத்தும் என உறுதியளிக்கப்பட் டுள்ளது.

அத்துடன், இலங்கையிலி ருந்து அகதிகளாக இந்தியாவுக்கு வந்த தமிழர்கள் குறித்தும் கரி சனை காட்டப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கு இந்தியக் குடியு ரிமை வழங்குவதற்கும், இலங் கைக்கு திரும்பிச் செல்ல விரும்பு பவர்களுக்குத் தேவையானவற் றைச் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (எ)



# பூசாரி போன்று நடித்து ஹெரோயின் விற்பனை

## 26 வயது பெண் உட்பட இருவர் கைது

நாவலப்பிட்டி,மார்ச்.14

பூசாரி போன்று வேடமிட்டு ஹெரோயின் போதைப் பொருள் விற்பனை செய்த இருவரை நாவலப்பிட்டி பொலிஸார் கைது செய்தனர்.

நாவலப்பிட்டி பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய போதைப்பொருள் வாங்குபவர் போல வேடமிட்டு பொலிஸ் அதிகாரி ஒரு குறித்த இடத்திற்கு சென்றே மேற்படி இருவரையும் நேற்றுப் பிற்பகல் கைது செய்ததுடன் குறித்த பெண்ணிடமிருந்த 140 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டது.

கம்பளை அட்டபாகை பகுதியைச் சேர்ந்த 67 வயது ஆணும் நாவலப்பிட்டி இங்குருஓயாவைச் சேர்ந்த 26 வயது பெண்ணுமே இவ்வாறு பூசாரி போல் நடித்து நாவலப்பிட்டி நகரிலுள்ள கடையொன்றில் சூட்சும மாக நீண்ட காலம் ஈ.சி.ஹாஸ் மூலம் பணம் பெற்று ஹெரோயின் போதைப்பொருள் விற்பனையில் ஈடு பட்டு வந்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களையும் நாவலப்பிட்டி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (எ)

# “புலனாய்வு துறையினரால் பல்வேறு அச்சுறுத்தல்கள்”

மட்டக்களப்பு,மார்ச்.14

புலனாய்வுத் துறையினரால் தாம் பல்வேறு அச் சுறுத்தல்களுக்கு உள்ளாகிவருவதாக வலிந்து காணா மல் ஆக்கப்பட்டோர் அமைப்பின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவி அ.அமலநாயகி கவலை வெளி யிட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலய முன்றி லில் இடம்பெற்றுவரும் சர்வதேச நீதிகோரிய சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் பல்வேறு தடைகளையும் தாண்டி நேற்று 11ஆவது நாளாகத் தொடர்ந்து இடம்பெற்றது.

இந்தப் போராட்டத்தில், காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளைத்தேடி பெண்கள் எத்தனையோ பேர் கண்ணீருடன் வீதியில் போராடிக் கொண்டிருக்கின் றார்கள் எனவும் அவர்களின் கோரிக்கைகளை சர்வ தேசம் கவனமெடுத்து செயல்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, தாங்கள் வெளியில் செல்லமுடியாத நிலையில் உள்ளதாகவும் தங்களுக்கு மன உளைச்சல் ஏற்படுத்தும் அளவுக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப் படுவதாகவும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவி னர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், தமது வீட்டிலிருந்து வெளியில் செல்ல வேண்டுமானால் புலனாய்வுத் துறையினரிடம் சொல் லிவிட்டுச் செல்லவேண்டும் என்றும் விண்ணப்பம் ஒன்று பூர்த்திசெய்து தரவேண்டும் எனவும் அழுத் தங்கள் பிரயோகிக்கப்படுவதாகவும் வலிந்து காணா மல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கவலை வெளி யிட்டுள்ளனர். (எ)

NEC
Empowering Educators to Inspire Students
A/L 2023
புதிய பிரிவுகள்
ஆரம்பம் 2021.03.12 வெள்ளி
காலை 9 மணி
பொருளியல்
S.ஜெயக்குமார்
அலுவலக தொடர்பு - 0703396696

அருந்ததி
இணைய திருமண சேவை

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
|---|---|
| 13424\| வே \|1985 தெல்லிப்பளை \| இந்து \|செவ் :02 Restaurant Manager\|Canada புனர்பூசம்(மிதுனம்) \|185செ.மீ | 13921\| ப\|1987 சாவகச்சேரி \|இந்து N/A \| Sri lanka\| சூ.செவ் :09 அஸ்வினி(மேடம்) \|160செ.மீ |
| 13614\|வி \|1985 நெல்லியடி\| இந்து\| Cashier\|France\| உத்தராடம்(தனுசு) \|170செ.மீ | 13279 \| வே \|1987 அல்வாய்\| இந்து \|Sri Lanka\| Assistant Director\|சூ.செவ் :08 ஆய்யிலியம்(கடகம்) \|165செ.மீ |
| 13563\| வே\|1985 வட்டுக்கோட்டை \| இந்து\| Executive officer\|Sri Lanka \| உத்தராடம்(மகரம்) \|172செ.மீ | 13698\| வே \|1988 யாழ்நகரம்\|இந்து \|Sri Lanka Development officer\| அத்தம்(கன்னி) \|157செ.மீ |
| 13560\|வே\|1985 பருத்தித்துறை\| இந்து \| Business\|உத்திரட்டாதி(மீனம்) UK\| 168செ.மீ | 13013\| வி\|1988 யாழ்நகரம் \| இந்து \|செவ் :08 Sri Lanka\| Clerk அனுஷம்(விருச்சிகம்) \|160செ.மீ |
| 13488\| வே \|1986 சாவகச்சேரி \| இந்து \|Sri Lanka Bank Officer\| கார்த்திகை(ரிஷபம்) 168செ.மீ | 13825\| ப \|1988 பொலிகண்டி\| இந்து \| Auditor \| Sri lanka\| பரணி(மேடம்) \|160செ.மீ |

20, கே.கே.எஸ் வீதி கொக்குவில் யாழ்ப்பாணம்
0777 164 524 www.arunthathee.com

DHL உள்நாடு, வெளிநாடுகளுக்கான
விரைவு பொதிகள் சேவை
உள்நாடு யாழ். - கொழு. கொழு. - யாழ். 12 மணித்தியாலங்களில் ஒப்படைக்கப்படும்
வெளிநாடு 3 - 5 நாட்களில் ஒப்படைக்கப்படும்
Lanka Cargo Worldwide Express (நிபந்தனைக்குட்பட்டது)
315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
076 283 2397 / 076 485 4092



விசேட விலையில் மடிக்கணனி
Laptop 4GB Ram
1 TB HDD Windows 10
HP i3
Free Bag கையிருப்பு உள்ளவரை
St.Antonys Computer
189, K.K.S Road, Jaffna Town, Jaffna.
021 222 4865 / 075 069 8608



# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் சைவ சித்தாந்த பண்டிதன்
சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் திரு. எப்.எக்ஸ்.அன்ரன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : நாளும் நல்லவை
வழங்குபவர் திரு. ந. சத்தியபாலன்
எழுத்தாளர், ஓய்வுபெற்ற ஆசிரியர்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை



12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)

பகல்

1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி
1.30 மணி : வீக் என்ட் மூவி
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : கலாய்க்கலாம் வாங்க (நேரலை)
6.00 மணி : HELLO கோடம்பாக்கம்
7.00 மணி : SPOT LIGHT - நாடாளுமன்ற
உறுப்பினர் முஜிபுர் ரகுமான்



8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி : செல்லாடுகளம்




10.00 மணி: பதிவு

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன்
வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : ஒஸ்கார் ராகங்கள்
10.00 மணி : டான் மிக்ஸ் மசாலா (நேரலை)

**பகல்**

12.00 மணி : நட்சத்திரம்
1.00 மணி : மஞ்சள் வெயில் மாலையிலே
(நேரலை)
3.00 மணி : இசை மேடை
4.00 மணி : வீக் என்ட் எக்ஸ்ப்றஸ் (நேரலை)
5.00 மணி : என்றென்றும் இசை

**இரவு**

7.00 மணி : பாட்டு தலைவர்கள்
8.00 மணி : பச்சை கிளி முத்துச்சரம்
9.00 மணி : நேசித்த நினைவுகள்
10.00 மணி : பக் ரு பக்

**காலை**

5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்
பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**

12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த. சாதாரண தர
மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த. சாதாரண தர
மாதிரி வினாத்தாள்

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : சின்மய சிந்தனை
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : யாழ்ப்பாணம் காரைநகர்
சிவன் கோவில் திருவிழா
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை
கெங்காதேவி கோவில் திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : யாழ்ப்பாணம் காரைநகர்
சிவன் கோவில் திருவிழா

**காலை**

8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
11.00 மணி : ஜெபமாலை

**பகல்**

12.00 மணி : நசரேத்துார்மரியா திரைப்படம்
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : மறை வகுப்பு
4.00 மணி : நிதர்சனம்
5.00 மணி : பாடல்

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.03.2021 அன்று
ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.